இன்னுமா இன அழிப்பு வேலை?

12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு.கருணாநிதி

"NAM NADU" Offictal Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 11—6—1978 | இதழ் 39

கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

இதிகாசங்கள், புராணங்கள் வாயிலாக நமது மக்களை வீரமற்றவர்களாகவும், விவேகமற்றவர்களாகவும் ஆக்கிடும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டவர்களை ஈரோட்டுப்படை அரண் அமைத்து தடுத்தது. அறிவுக்கு ஒவ்வாத கதைகளை ஆண்டவன் பெயராலும், அவதாரங்களின் பெயராலும் பரப்பியவர்களால் தமிழர்களின் இலக்கியப் பெருமை, வரலாற்றுப் பெருமை அனைத்தும் மறைக்கப்பட்டன. மறைந்துகிடந்த அந்த மாணிக்கங்களைத் தமிழ்ப் புலவர்கள் வெளிக்கொணர்ந்தனர். அந்தப் பெருமைமிகு புலவர் பெருமக்களால் தோண்டியெடுக்கப்பட்ட தமிழ் மக்களின் கருவூலங்கள், தமிழர்களின் தொன்மைக் காலச் சிறப்பையும், வீர வரலாற்றையும் எவ்வாறு விளக்குகின்றன என்பதனைப் பண்டிதர்களல்லாத பாமர மக்களிடமும் பரப்பிய பெருமை பெரியாரின் தானைத் தளபதியாம் பேரறிஞர் அண்ணா அவர்களையும், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களையும் சாரும்!

அவர்கள் வழிநின்று பழந்தமிழ் இலக்கியங்களைப் பரப்புவதின் மூலம் இன்றைய தமிழ் மரபு விழிப்புக்கொண்ட மரபாகவும், வீரங்கொள் மரபாகவும் ஆக வேண்டுமென்பதே நமது குறிக்கோள். அந்தக் குறிக்கோள் நிறைவேறவே நமது கழகம் இலக்கிய அணி ஒன்றைத் துணை அமைப்பாகக் கொண்டு அந்த முனையில் பணியாற்றி வருகிறது. நமது பணி எவ்வளவு இன்றியமையாதது என்பதற்கும் — நமது பணியினால் யார் யாருக்கு மன உளைச்சல் ஏற்பட்டிருக்கிறது என்பதற்கும் ஆதாரம் தேடி எங்கும் அலைந்திட வேண்டிய அவசியமில்லை. சில நாட்களாகத் 'தினமணி' இதழில் எழுதப்பட்ட புறநானூறு பற்றிய தொடர் கட்டுரையே போதுமானது.

புறநானூறு குறித்துப் புகழ்பாடப் போவது போலப் போக்குக்காட்டி, பாலில் நஞ்சினைப் பக்குவமாகக் கலந்திடும் வேலையைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

தமிழ் மன்னர்கள் தானே ஒருவரோடுவர் மோதிக் கொண்டார்கள்? இதில் பெருமைப்பட என்ன இருக்கிறது? தோற்றுவிட்ட நாட்டின் மீது வெற்றி கண்ட மன்னர்கள் வெறித் தாக்குதல் நடாத்தி அந்த நாடுகளையே அழித்தொழித்தனர்; இது என்ன பண்பாடு?

குளிரால் வாடிய மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகன் என்ற மன்னன், தன் இல்லத்து மயில் வாடுவதைப் பற்றிக் கவலைப்படாமல் பரத்தையர் இல்லம் சென்றது போற்றத்தக்க பண்பா? தமிழ் மன்னர்களும் தமிழ்ப் புலவர்களும் 'மது' அருந்தினர் என்பதற்குச் சான்றுகள் புறநானூற்று நூலில் காணப் படுகின்றனவே!

இப்படியெல்லாம் தினமணிக் கட்டுரையாளர் எழுதிப் புறநானூற்றின் மீது புழுதிவாரித் தூற்றி, அடுத்து அகநானூறு பற்றியும் எழுதப் போவதாக அறிவித்துள்ளார்.

'தமிழர்கள், தங்களுக்குள்ளாகவே போரிட்டுக் கொண்டது பாராட்டுக்குரிய வீரமா?' என்று கேட்கிறார். பல்வேறு நிலப் பகுதிகளைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டிருந்த மன்னர்களிடையே போர் மூண்டது என்பது தமிழ் நாட்டில் மட்டுமல்ல; உலகெங்கும் நடைபெற்ற வரலாற்று நிகழ்ச்சிகள் தான்! ஏன்; இன்றளவும் நடைபெறுகிற நிகழ்ச்சிகள் தான்! சூதாட்டத்தில் தோற்றுவிட்ட நாட்டைத் தன் சகோதரர்களே ஆளட்டும் என்று துரியன் கூட்டத்தாரிடம் நாட்டை விட்டுவிடக் கூடிய பெருந்தன்மை தருமனுக்கே வரவில்லையே! அவர்களை ஊக்கப் படுத்திய கண்ணனுக்கே வரவில்லையே! அதுபற்றி விமர்சிக்க, தினமணிக் கட்டுரையாளரின் பேனா முன்வருமா? வராது! பேகன், தன் மனைவியை விடுத்து இன்னொருத்தியை நாடியது குற்றமெனப் பூதக் கண்ணாடி கொண்டு ஆராய்ந்து அதற்காகப் புறநானூற்று இலக்கியத்தின் மீதே சேறு வாரி வீசுகிறவர்; குளத்தில் நீராடிக் கொண்டிருந்த பெண்களின் சேலைகளைத் திருடி, மரத்தில் அமர்ந்து குழலூதிக் கும்மாளமிட்ட கோபால கிருஷ்ணன் பற்றி விமர்சிப்பதற்குத் தன் பேனாவைத் திருப்பியதுண்டா? கோபிகைகள் என்ன; பிறன் மனைவி இராதையென்ன - பாமா என்ன — ருக்மணி என்ன இந்த விளையாட்டுக்களை நடத்தியது மனிதன்கூட அல்ல தெய்வம் நடத்தியது; ஆம்; கிருஷ்ணாவதாரம் நடத்தியது! அது தினமணிக் கட்டுரையாளருக்குத் தித்திக்கும் காட்சிகள் போலும்;

பகைவர் நாட்டையே அழிப்பதுபண்பாடாகாது என்று பதைக்கிறாரே; கட்டுரையாளர் — இராமாயணத்தில் அனுமக் கடவுள் இலங்கையையே எரித்தது எந்த வகையில் நியாயம் என்று நிலை நாட்டப் பார்க்கிறார்? சோமா, சுரா போன்ற பானங்களை அருந்துவதேதேவர்களின் பழக்கம் — அந்தப் பழக்கத்தின் அடிப்படையில் இராமாயணத்தில் இராமன் குழுவினர் கூட மது அருந்தினர் என்று வான்மீகி கூறுகிறாரே; தினமணிக் கட்டுரையாளர் அதனை மறைப்பதில் காட்டுகிற ஆர்வத்தை புறநானூற்று இலக்கியத்தில் குறிப்பிடுகிற 'தேறல்' எனும் ஒரு வகை மதுவைப் பற்றிக் குறிப்பிடாமலிருக்கக் காட்டவில்லையே என்ன காரணம்?

வாலி சுக்ரீவன் மோதலில், மறைந்திருந்து வாலியை இராமன் கொன்றது நியாயமென நிலை நாட்டுகிறவர்கள் தமிழக வரலாற்றில் காணப்படும் வீரமிக்க நிகழ்ச்சிகளை இகழ்ந்துரைப்பானேன்?

முதுகில் காயப்பட்டுப் போரில் மடிவதை இழிவாகக் கருதிய வீரம் புறநானூற்றுக் காலத்து வீரம்! தந்தையும், கணவனும் களம்பட்ட செய்தி கேட்டும் பதறாமல், தன் இளம் மகனையும் போருக்கு அனுப்பிய தாயொருத்தியின் வீர காதையை விளக்குவது புறநானூறு! தமிழ் மன்னர்களுக்கிடையே போர் மூளக் கூடாதென்று இருசாராரையும் அமைதிப் படுத்திடப் புலவர்கள் முயற்சி மேற்கொண்ட செய்திகளை அறிவிப்பது புறநானூறு!

அந்தவீர இலக்கியத்தைப்பற்றி எஸ். வையாபுரிப் பிள்ளையேகூட பின்வருமாறு கூறுகிறார். ''வையாபுரிப் பிள்ளையே கூட'' என்பதற்கான பொருள் பலருக்கும் விளங்குமென்றே நம்புகிறேன்.

'' நாடு நலம் பெற வேண்டுமாயின் — பழங்கால நல்லுணர்ச்சிகளை நாம் மீண்டும் பெறுதல் வேண்டும். நாட்டுக்காக உயிர்விடுதல் என்பது பழங் கதையாகப் போய் விடக்கூடாது. அந்த வீர உணர்வுகளை மீண்டும்பெற. புறநானூற்றுச்

12-ம் பக்கம் பார்க்க]

உணர்வு படைத்தோர், உடன் செயல்படுக!

கழகம் ஒரு கற்கோட்டை!

'வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தின் மீது ஏறிக்கொண்டது' என்பார்களே விக்கிரமாதித்தன் கதைகளில் அதைப் போல அ. தி. மு. க. அரசு மீண்டும் சர்க்காரியா அறிக்கையின் மீது தாவி ஏறிக் கொண்டது

வெறும் வாயை மெல்கிறவனுக்கு அவல் கிடைத்ததைப் போல சர்க்காரியா அறிக்கை அதன் கைக்குக் கிடைத்து விட்டது!

அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதைவிட எல்லாம் இருப்பதாகக் காட்டுவதில் சில ஏடுகள் அதிக ஆரவாரம் காட்டி வருகின்றன தமிழக அரசைக் கட்டிக் காப்பதற்கு இதை விட்டால் வேறு வழி இல்லாமையால் அரைத்த மாவையே அரைப்பதைத்தவிர அந்தஏடுகளுக்கு வேறு வழியும் இல்லை!

தமது திறமையின்மையை மறைப்பதற்கு சுமார் இரண்டரை ஆண்டுகட்கு முன்பிருந்த ஆட்சியின் மீது பழி போடுவதைத்தவிர வேறெதுவும் செய்யத் தெரியாத நிலையில் இன்றைய ஆட்சியாளர் இருப்பதால் அவர்களையும் குறை சொல்லிப் பயனில்லை!

கழகத்தைப் பழித்தே ஆட்சியைப் பிடித்தவர்கள். அந்தப் பழிப்பையே மூலதனமாக்கித் தம் ஆட்சியை நிலைநிறுத்த முயல்வது எதிர்பார்க்கக் கூடிய ஒன்றுதான். ஆட்சிகட்டில் ஏறிய காரணத்தாலேயே பழிப்பாளர்பண்பாளர் ஆகிவிடுவர் என எதிர் பார்ப்பது பேதமை!

ஆனால்...

மக்களாட்சிக்குப் புத்துயிர் தர வந்துதித்த ஜனதா கட்சியும் அதன் அரசும், தி. மு. கழகத்திடம் தம் தொடர்பை எவ்வாறு வைத்துக் கொண்டுள்ளன? அதன் எதிர் காலம் இன்று கேள்விக்குறி ஆகிவிட்டிருப்பினும் தான் கொண்ட கொள்கையைப் பேணுவதிலேனும் அது திடமாக நடந்துள்ளதா? சற்று ஆழ்ந்து நோக்கினால் நம்மைப் பொறுத்தவரை அதன் போக்கு அதிர்ச்சி தரத் தக்கதே!

எதிர்க்கட்சியே ஆயினும் வலுவான ஒரு மக்களியக்கம் தி. மு. க. என்பதை எவரும் மறுத்திடார். தான் ஆட்சியில் இருந்தபோது நேரவிருந்த சாதக பாதகங்களைப் பொருட்படுத்தாது, மக்களாட்சி காப்பாற்றப் பட்டாக வேண்டும் என்ற ஒன்றை மட்டுமே கருத்தில் கொண்டு கைதான தேசத் தலைவர்கள் விடுதலைக்கு முதல் குரல் கொடுத்தது கழகம்! நெருக்கடி நிலையைத் துணிந்து வெளிப்படையாகக் கண்டித்த கட்சியும் தி. மு. கழகம் ஒன்றுதான்!

தேசத் தலைவர்கள் கைதானதையோ, நெருக்கடி நிலை பிரகடனத்தையோ நாளது வரை கண்டிக்காதது மட்டுமல்ல, சரி என்றும் வாதிட்டு வருகின்ற கொள்கைத் தங்கங்களுடன் கூடிக் குலாவும் ஜனதா அரசும் கட்சியும் தி. மு. க.—வைப் பொறுத்து எவ்வாறு நடந்து கொள்கின்றன?

எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் அரசியல் சாசனத்திற்குப் புறம்பான வழியிலேயே தி. மு. க. ஆட்சி கலைக்கப்பட்டது. தேர்தல் களத்தில் இதனைச் சுட்டிக் காட்டத் தவறாத ஜனதா. ஆட்சிக்கு வந்தபின் இதுபற்றி வாய்திறக்கவில்லை!

ஒரு தனி விசாரணை மூலம் இந்த அநியாயம் நாட்டிற்குத் தெரிவிக்கப்பட வேண்டும் என்ற கழகத்தின் வேண்டுகோள் புறக்கணிக்கப் பட்டது ஏன்?

மக்களாட்சியின் மாண்பினை நிலைநாட்ட ஜனதா பாடுபடுவது உண்மையானால், கழகம் கேளாமலே ஜனதா செய்திருக்க வேண்டிய காரியமல்லவா இது?

மக்களின் ஒப்புதலுடன் நடைபெற்ற ஓர் ஆட்சியை, சர்வாதிகாரம் எப்படித் தான் தோன்றித்தனமாக அகற்றியது என்பது நாட்டிற்குத் தெரியவேண்டாமா! தெரிந்திருந்தால், மக்களனுதாபம் தி.மு க.-வுக்குத் தானே கிடைக்கும் தனக்கென்ன லாபம் என்று ஒருவேளை ஜனதா கருதியிருக்கலாம்! அப்படிக் கருதியிருக்குமேல், மக்களாட்சித் தத்துவத்தின் மீது அதற்குள்ள காதலைவிடத் தன் கட்சிக்கு ஆதாயம் தேடும் கீழ்மையான அரசியலையே ஜனதாவும் நாடுகிறது என்ற குற்றச் சாட்டிலிருந்து அது தப்ப முடியாது!

செகந்தப்பன்

அப்படியில்லையேல் வேறு என்ன காரணம்? ஏன் மத்திய ஆட்சி இவ்வகையில் இன்னும் வாய் மூடிக் கிடக்கிறது? 'சட்டத்தின் வழி ஆட்சி' எனப் பெருமை பேசும் ஜனதா, சட்டம் சவக்குழிக்குப் போன கதை ஒன்றை நாட்டு மக்களிடம் சொல்லக் கூசுவானேன்?

இரண்டாவதாக — சென்னைச் சிறையில் கழகத்தினரும் பிறரும் கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டதும். சிட்டிபாபு செத்ததும் நாட்டு மக்களிடையே பறைசாற்றப் பட்டிருக்க வேண்டிய ஒரு செய்தி, ஜனதா விரும்பியிருந்தால் சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னரே இதைச் செய்திருக்க முடியும்!

ஜனதாவைச்சேர்ந்தசிலரே சிறைக் கொடுமையை அனுபவித்தவர்கள் என்பதால் அந்தக் கட்சிக்குச் சிறைக்குள் நடந்தது தெரியாமல் இருக்க நியாயமில்லை! தமிழகத்திலுள்ள பலருக்கு சிட்டிபாபு எழுதிய நாட்குறிப்புப்பற்றிய செய்திகள் தெரியுமுன்னரே, இன்று அமைச்சராகவுள்ள அத்வானி அது பற்றித் தெரிந்திருந்தார் என்பதை நான் அறிவேன்!

நாடாளுமன்றத் தேர்தலின்போது, கழகத் தலைவர் ஒரு அலுவல் நிமித்தம் என்னை டில்லி அனுப்பியபோது, நான் சந்தித்த சில தலைவர்களில் அத்வானியும் ஒருவர் அவரை ஏற்கனவே ஜனசங்கத் தலைவராக — அவர் மாநிலங்கள் அவையில் இருந்தபோதே — நான் நன்கு அறிவேன். தேர்தல் நிலவரங்கள் பற்றி உரையாடுகிற நேரத்தில், வடக்கே நிலைமை நன்றாக இருப்பதாகத் தெரிவித்த அவர் தெற்கில் இன்னும் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு, சிட்டிபாபுவின் 'டயரியை' மொழி பெயர்த்து வெளியிட உடனடியாக ஆவன செய்ய வேண்டும் எனக் கூறினார் எனக்கோ அது அப்போதுதான் கேள்விப்படும் ஒரு புதிய செய்தியாக இருந்தது! காரணம், சிட்டிபாபு சிறைக்குள் 'டயரி' எழுதியது மட்டுமே எனக்குத் தெரியும்: ஆனால் அது பாதுகாப்பாக கலைஞரிடம் சேர்ப்பிக்கப்பட்டிருப்பது எனக்கே அப்போது தெரியாது!

இந்த அளவுக்குச் சிறைச் செய்திகளைத் தெரிந்து வைத்திருந்தவர்கள் மத்தியில் ஆட்சிக்கு வந்த பின்னால் சென்னைச் சிறைச்சாலையில் நடந்தவற்றை அம்பலப்படுத்த எந்த முயற்சியும் சட்டமன்றத் தேர்தலுக்கு முன் எடுக்காமைக்கு என்ன காரணம்? கழகத்தின் பால் தானே மக்களுக்குப் பரிவு உண்டாகும் தமக்கென்ன லாபம் என்ற எண்ணமா?

சர்வாதிகாரக் கொடுமைகள் வெளிப்படுத்தப்படுவதில் கூடத் தமதுகட்சிக்கு ஆதாயம் தேடுவோர் எவ்வாறு நேர்மையான ஜனநாயகவாதிகளாகத் திகழ முடியும்?

ஜனநாயகம் வாழ ஓர் இயக்கம் தனது ஆட்சியைப் பலியிட்டுக் கொண்டது என்ற பரிவுகூட ஜனநாயகத்தைக் காப்பதற்கே அவதாரம் எடுத்த ஓர் ஆட்சியிடம் இல்லாமல் இருப்பது எவ்வளவு பெரிய வியப்பு!

மூன்றாவதாக—

சர்க்காரியா கமிசன் என்பது அரசியல் பழிவாங்கும் நடவடிக்கையே என முழங்கினார் மொரார்ஜி. ஆனால், அது பிரதமராவதற்கு முன்பு-ஆட்சிக்கு வந்த பின்பு. கமிசனைக் கலைத்து விடும்படிக் கூடத் தி.மு.க. அவரிடம்கேட்கவில்லை அதனை நியமித்த நேரமும், அது செயல்பட்ட வகையும், புலன்விசாரணைகளுக்குக் கையாளப்பட்ட நெறியல்லா நெறிமுறைகளும அது நியாய உணர்வோடு நேரிய வழியில் இயங்கவில்லை என்பதையும் அரசியல் உள்நோக்கத்துடன் ஒருதலைப்பட்சமாகவே அதன் போக்கு இருந்தது என்பதையும் சுட்டிக் காட்டி, மறுவிசாரணை நடத்தப்படவேண்டும் என்றே தி. மு. க. கேட்டது அதை ஏற்று. அடிப்படை நியாயங்களைச் சார்ந்து நின்று, எவ்விதப் பழி வாங்கும் போக்குக்கும் இடம் தராமல் நீதி வழங்கவே ஜனதா அரசு விரும்புகிறது என்ற அறிவிப்பைக் கூட அதனால் தர முடியவில்லையே அது ஏன்?

பொய்யான புனைவுகள் தாம் என்றாலும், தி. மு. க. வுக்கும் அதன் தலைவருக்கும் எதிராகத் தாமே உருவாகின்றன. நமக்கென்ன என்ற எண்ணமா?

அரசியல் நோக்கத்துடன் பழி வாங்கும் உணர்வுடன் தி மு கழகம் களங்கப்படுத்தப்பட்டாலும் தி மு, க. வின் பக்கம் நியாயம் இருக்கிறது என்றாலும், அதைக் கைதூக்கி விடுவதால் தமக்கென்ன லாபம் என்ற நினைப்பா? தமக்கும் ஒரு கட்சி இருக்கிறதே, அதையல்லவா தாம் வளர்த்தாக வேண்டும் என்ற குறுகிய அரசியலா?

ஒருவேளை தி மு. க. வின் கோட்பாடு தமக்குப் பிடிக்காத காரணத்தால் எப்படியோ அது ஊனப்படுத்தப் படுவது தன் கட்சிக்கு ஆக்கமே—நீதி நியாயம் என்றெல்லாம் பார்த்துக் கொண்டு; அரசியல் ஆதாயத்தை மறந்து ஊருக்கு உண்மையைப் புலப்படுத்துவது தி மு க. வுக்குத் தானே வளர்ச்சியை நல்குவதாக இருக்கும்—

என்பனபோன்ற மலிவான அரசியல் உணர்வுகளா?

தி. மு. க. தன் மீதுபோடப்பட்ட வழக்குகளை முற்றாகத் திரும்பப் பெறு என்று வலியுறுத்தாமல், நீதி விசாரணை செம்மையுடன் மீண்டும் நடக்க வழி செய்ய வேண்டும் என்று கேட்பதற்கே. காரணம் எதுவாயினும், ஜனதாவின் ஜனநாயகக் கற்பு நிலைகுலைந்து. விட்டது!

இன்று சர்க்காரியாவின் பரிவுரைகள் வெளியாகி விட்டன, நடிக முதல்வர்; 72-ஆம் ஆண்டிலிருந்து சுமந்தது — அவர் தம் மன எரிச்சலாம் பாவ மூட்டையே என்பதும் மக்களுக்குப் புரிந்து விட்டது!

எனினும் கொண்டது விடா மூர்க்கனைப்போல் செயல்படும் மாநில அரசு கழகம் ஒரு கற்கோட்டை என்பதை உணர்ந்து நடப்பது நாட்டுக்கு நல்லது!

தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர் தேர்தல்

புதிய பொதுக்குழு மதுரையில் கூடுகிறது

பொதுச்செயலாளர் அறிவிப்பு

மாவட்டக் கழகங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பொதுக்குழு—தலைமைச் செயற்குழு உறுப்பினர்களும் மாநில அமைப்புக் கழகங்களால் தேர்ந்தெடுக்கப்படும் பொதுக்குழு தலைமைச் செயற்குழு உறுப்பினர்களும்—மாவட்டக் கழகச் செயலாளர்களும், மாநில அமைப்புக் கழகச் செயலாளர்களும் தகுதி பெற்ற ஒன்றிய, நகரக் கழகச்செயலாளர்களும் சென்னை பகுதிக் கழகச் செயலாளர்களும் அடங்கிய புதிய பொதுக்குழுவின் முதல்கூட்டம் 18—6—78 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மதுரை நகரில் நடைபெறும். (இடம் பின்னர் அறிவிக்கப்படும்).

அதுபோது

1. கழகத் தலைவர்
2. பொதுச்செயலாளர்
3. பொருளாளர்
4. தணிக்கைக்குழுவுக்கு 3 உறுப்பினர்கள்.
5. ஆட்சிமன்ற குழுவுக்கு 6 உறுப்பினர்கள் ஆகிய பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெறும்.

க. அன்பழகன்
பொதுச்செயலாளர் தி. மு. க.

அறிவகம்,
சென்னை
1–6–78

★★★★★-★★★★★★

நம் நாடு
ஆசிரியர்: மு. கருணாநிதி

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25.00
ஆறுமாத சந்தா ரூ. 12.50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

நிர்வாகி,
நம் நாடு.
அன்பகம், சென்னை-600018

★★★★★★★-★★★★

மாநிலக் கட்சியின் மாபெரும் வெற்றி!

இந்திய நாட்டின் எல்லைப்புறப் பகுதிகளில் மிசோரமும் ஒன்றாகும். மாநில நிலைக்கு அடுத்த நிலையிலுள்ள யூனியன் பகுதி அது. மூன்று இலட்சத்து ஐம்பது ஆயிரம் மக்களைக் கொண்ட மிசோரமில், ஐம்பத்து ஐந்து சதவிகித மக்களுக்குமேல் கல்வி அறிவு உடையவர்களாக இருக்கிறார்கள்.

மிசோரத்தில் அண்மையில் நடைபெற்ற சட்டப் பேரவைப் பொதுத் தேர்தலில் பல கட்சிகள் ஈடுபட்டன. இந்தியாவே அதிர்ந்திடும் வகையில் தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டன. நாகலாந்தில் நடந்ததைப் போலவே இங்கும் மாநிலக் கட்சியான மிசோ மக்கள் மாநாட்டு கட்சி இத்தேர்தலில் மகத்தான வெற்றியை அடைந்துள்ளது. இக்கட்சி 'குழந்தைப் பருவத்திலிருந்தபோதும் குவித்துள்ள வெற்றியைக் குவலயமே கண்டு மலைக்கின்றது. முன்னாள் இராணுவ அதிகாரியான தென்புங்கா சைலோ என்பவரே இக்கட்சியின் தலைவர்.

இந்தியாவின் இருண்டகாலத்தில், மிசா சட்டத்தின் கீழே இவரையும் இவரைச் சார்ந்த நால்வரையும் நாட்டில் நடமாடக் கூடாது என்று கூறி கைது செய்து சிறையிலே தள்ளினர். சித்திரவதைக்கு ஆளாக்கினர்.

சென்ற ஆண்டில்கூட இக்கட்சி ஒரே இடத்திற்கான நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றது.

அதுமட்டுமின்றி, அண்மையில் நடைபெற்ற நகராட்சித் தேர்தலில்கூட இருபத்திரண்டு நகராட்சிகளின் இருபதைக் கைப்பற்றி உள்ளது. மிசோரத்தின் மகத்தான கட்சியென்று உலகுக்குத் தன்னைக் காட்டிக் கொண்டது.

1972ஆம் ஆண்டு நடந்த சட்டப் பேரவைத் தோதலில் மிசோ சங்கம் இருபத்தொரு இடங்களில் வெற்றிவாகை சூடியது. காங்கிரஸ் கட்சியோ ஆறு இடங்களை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. ஆனாலும், சட்டப்பேரவை உறுப்பினர்கள் மீதமுள்ள இருபத்து நான்கு பேர்களும் காங்கிரஸ் கட்சியில் கலந்துவிட்டனர்.

ஆட்சித் தலைமையில் இருந்த சுங்கா கடந்த ஆண்டு ஏப்ரல் திங்களில் ஆட்சிப் பொறுப்பிலே இருந்து அகன்றார். அதைத் தொடர்ந்து மிசோரம் குடியரசுத் தலைவரின் நேரடி ஆட்சிக்கு வந்துவிட்டது.

கலகக்காரர்கள் தங்கள் பணியைத் தொடங்குகிற நேரத்தில் சைலோ ஆட்சிப் பீடத்தில் அமர்கிறார். மிசோ தேசிய முன்னணியின் தலைவரான லால் டெங்கா நடந்து முடிந்த தேர்தலைப் புறக்கணித்தார்.

1976ஆம் ஆண்டு லால் டெங்கா இந்திய அரசோடு சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட்டும் அதை மீறிவிட்டதாகக் கூறப்படுகிறது. தலைமறைவு நாகர்களோடு அரசு ஷில்லாங்கில் செய்துகொண்ட ஒப்பந்தத்திற்கு பின்னால்தான் இது நடந்தது.

மிசோரத்தில் சுமார் ஆயிரம் கலகக்காரர்களும் அண்டை நாடுகளில் ஐந்நூறு பேர்களும் இருப்பதாக அரசு கணக்கிட்டு இருக்கின்றது.

நடைபெற்ற தேர்தலில் ஐம்பது சதவிகித மக்களுக்குமேல் பங்குபெற்று இருக்கிறார்கள். அமைதியான உடன்படிக்கைக்கு இவர்கள் ஆவலாய் உள்ளார்கள் என்பதை இத்தேர்தல் தெளிவாகக் காட்டுகிறது.

மத்திய அரசும், பாதுகாப்புப் படையினரும் அவ்வப்போது எடுத்து வந்த (Curfew) நடவடிக்கைகள் கடுமையான தடையுத்தரவுகள் மக்களுக்கு இன்னல்கள் விளைவித்திருக்கின்றன.

இங்குள்ள ஐந்நூற்று ஐம்பது கிராமங்களையும் இணைத்து நூற்று பத்து மையங்களாக பிரித்து அமைத்து கலகக்காரர்களின் கடுமையான தொல்லைகளிலிருந்து காப்பாற்றலாம் என்பதாக அரசு முடிவு செய்துள்ளது. சமீப காலத்தில் கட்டாயப்படுத்தப்பட்டு அமைக்கப்பட்ட இந்த இணைப்புகள் கரைந்துவிட்டுள்ளன. வன்முறையும் தலைகாட்டியுள்ளன.

இன்றைக்கு அமைந்துள்ள மக்கள் செல்வாக்குப் பெற்றுள்ள அரசு குடியுள்ள பகுதிகளை எப்படி சீரமைப்பது என்பது பற்றி முடிவு எடுக்க வேண்டும்.

ஆனால், சென்ற ஆண்டு மட்டும் மிசோரத்துக்கு அரசு எண்பது கோடி ரூபாயை செலவிட்டுக் கொண்டு வருகிறது.

1972ஆம் ஆண்டிலேயிருந்து எல்லைச் சாலையின் அமைப்பு மட்டும்—ஆண்டுக்கு பத்து கோடி ரூபாயை செலவிட்டுக் கொண்டு வருகிறது.

1972ஆம் ஆண்டுவரை மிசோரம் அசாம் மாநிலத்தின் ஒரு பகுதியாகவே இருந்து வந்துள்ளது. தேர்தலில் பங்குபெற்ற சில கட்சிகள் மிசோரத்துக்கு மாநில அந்தஸ்து அளிக்கப்பட வேண்டும் என்று கோருகின்றன.

இந்திய அரசின் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகள் சைலோக்குக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. கடந்தகால ஆட்சியில் இருந்த சுங்கா மத்திய அரசின் ஆலோசனை பின்படி நடந்துகொண்டதுபோல் சைலோ அவ்வளவு எளிதாக ஆலோசனைகளை ஏற்றுக் கொள்ளமாட்டார் என்றே தெரிகிறது.

ஆனால், இந்த அனுபவங்கள் எல்லாம் மத்திய அரசுக்கு புதியவை அல்ல. அமைதி வழிப் பாதைக்கு மிசோ மக்களை திருப்பிவிட அரசு மேலும் அக்கறை எடுத்துக்கொண்டுள்ளது. அதில் வெற்றி பெறுமா என்பது அதன் செயலிலே உள்ளது.

—சி. க.

உங்கள் காதுக்கு மட்டும்!

நடிகருக்குள்ள நிபந்தனை நாவலருக்கு இல்லையா?

அ.தி.மு.க மூலவரின் 'இரத்தத்தின் இரத்தமாகி'விட்ட இளம் நடிகர் ஒருவர், அந்தக் கட்சியின் உறுப்பினராகப் பதிவு செய்து கொள்ளுமுன் அவரது கையில் பச்சை குத்தப்பட்டதாம். பச்சை குத்தியபோது எடுக்கப்பட்ட படமும் பத்திரிகையில் வெளியாகியுள்ளது. பச்சை குத்திக் கொள்வதாக இருந்தால்தான் கட்சியில் சேர்த்துக்கொள்ள முடியும் என்று அவருக்கு கட்சியின் மேலிடம் நிபந்தனை விதித்ததாம்.

முன் வைத்தகாலைப் பின் வைக்கக்கூடாது என்ற 'மறவர் குல' மரபுப்படி அந்த இளம் நடிகரும் அந்த நிபந்தனையை ஏற்று, உறுப்பினராகி இருக்கிறாராம். அவருக்கு 'நிபந்தனை' விதித்தபோது, அவர் அமைதியாக ஒரு கேள்வியையும் கேட்டு வைத்தாராம். "எனக்கு மட்டும் தானா இந்த நிபந்தனை? கட்சிமாறி வந்து சேருபவர்களுக்கெல்லாம் இல்லையா?" என்பதே அந்தக் கேள்வி.

அதற்கு, "மற்றவர்களைப் பற்றியெல்லாம் நீங்கள் கேட்கக்கூடாது. நீங்கள் பச்சை குத்திக்கொள்ள வேண்டும் என்பது புரட்சித் தலைவரின் கட்டளை" என்று பதிலளிக்கப்பட்டதாம்?

'கட்சி மாறி வந்து சேர்ந்து கட்சியின் அவைத் தலைவராகவே ஆகிவிட்ட நெடுஞ்செழியன், 'மந்திரி அந்தஸ்துப் பதவி' பெற்றுள்ள இராசராம், பச்சை குத்துவதையே எதிர்த்து வெளியேறி, தனிக் கட்சி நடத்தி மீண்டும் வந்து சேர்ந்து திட்டக்குழுத் துணைத் தலைவராகியிருக்கும் கோவை செழியன், கட்சிவிட்டுக் கட்சிதாவி கடைசியாக மீண்டும் வந்துசேர்ந்த ஹண்டே போன்றவர்களெல்லாம் பச்சை குத்திக் கொண்டார்களா? ஆர்வத்துடன் வந்துசேரும் ஓர் இளம் நடிகருக்கு மட்டும் ஏன் இந்த நிபந்தனை?' என்று நடிகர் கட்சியைச் சேர்ந்த ரசிகப் பிரமுகர் ஒருவர் மனம் குமுறுகிறார்!

ஃ ஃ ஃ

சீச்சீ.....இந்தப் பழம் புளிக்கும்!

'என்ன உங்களுக்கு இன்னும் ஒரு பதவியும் உருவாக்கப்படவில்லையா?' என்று, அ.தி.மு.க. அவைத் தலைவரிடம் அவர்பால் அக்கறை கொண்டுள்ள நண்பர் ஒருவர் கேட்டாராம்.

அதற்கு அவர், அசட்டுச் சிரிப்புச் சிரித்துக்கொண்டு "நானே இப்போது எனக்குப் பதவி எதுவும் வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்; இப்போது நான் பதவி பெற்றால் இந்தப் பதவிக்காகவே கட்சி மாறினேன் என்பது உறுதியாகிவிடும். கொஞ்சநாள் போனால் கட்சி மாறிய விவகாரமெல்லாம் மக்களுக்கு மறந்து போய்விடும். அதன் பிறகு வேண்டுமானால் ஏதேனும் பதவியை ஏற்றுக்கொள்ளலாம் என்றிருக்கிறேன்" என்று சாவதானமாகப் பதில் சொன்னாராம்।

'அப்படியா சங்கதி......?' என்று ஏளனமாகச் சிரித்துவிட்டு, 'இதுவும் நல்ல விளக்கம்தான்' என்று கூறினாராம், நண்பர்.

ஃ ஃ ஃ

மாற்றுக் கட்சிக் கலைஞர்களுக்கு வாய்ப்பு இல்லையாம்!

குடும்பநலத் திட்டப் பிரசாரத்துக்காகத் தமிழ்நாடு அரசு கலை நிகழ்ச்சி நடத்தும் குழுவினரைத் தேர்ந்தெடுத்துப் பல இடங்களுக்கும் அனுப்பிவைக்கிறது. தி.மு.க. ஆட்சிக்காலத்தில் கட்சிக் கண்ணோட்டமின்றி, எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த கலைக் குழுவினரும் இப்பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால், இப்பொழுது ஆளுங் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே இவ்வாய்ப்புக் கிடைக்கிறதாம். ஆளுங்கட்சியைச் சேர்ந்த 'நடிகப் பிரமுகர் ஒருவரின் பரிந்துரையின் பேரில்தான் கலைக் குழுவினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களாம். முந்திய ஆட்சிக் காலத்தில் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள் நடத்திப் பாராட்டுப் பெற்ற கலைஞர்களெல்லாம், இன்று ஆளுங் கட்சியில் இல்லாத காரணத்தினாலேயே இந்த வாய்ப்புக் கிட்டாமல் அலைக்கழிக்கப்படுகிறார்களாம்.

ஃ ஃ ஃ

பண்ணுருட்டியாருக்கு நேர்ந்த கதி!

பண்ணுருட்டி இராமச்சந்திரனிடமிருந்து ஓர் இலாகா பறிமுதல் செய்யப்பட்டதல்லவா? இதற்குக் காரணம் என்ன தெரியுமா? சட்டமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் கலைஞர் அவர்கள் பண்ணுருட்டியார் தொடர்பாக 'காண்ட்ராக்ட்' ஊழலை வெளியிட்டதன் எதிரொலிதான் இது! முதலமைச்சரே அதிகாரிகளை அழைத்து நேரில் விசாரித்தபோது பண்ணுருட்டியாரின் ஊழல் அம்பலமாயிற்றாம்! இப்பொழுது அவர்மீது நடவடிக்கைஎடுத்தால் ஊர்சிரிக்கும் என்பதால கொஞ்சம் ஆறப் போட்டிருக்கிறாராம். இன்னும் சிறிது காலத்தில் வீட்டுக்கு அனுப்பப்பட இருக்கும் மந்திரிகள் பட்டியலில் பண்ணுருட்டியாரின் பெயரும் இடம் பெற்றுவிட்டதாக அ.தி.மு.க. வட்டாரத்திலேயே பேச்சு அடிபடுகிறது!

·சேனு

நான் புரிந்துகொள்ள விரும்பவில்லை!

எதிர்ப்பு தலைவர் கலைஞரின் உடன் பிறப்பு, சோதனை அவரை நீங்காது தொடரும் நிழல்; எதிர்நீச்சல் அவர் நாள்தோறும் மேற்கொள்ளும் அரசியல் பயிற்சி.

மாவீரன் மாவோ நடத்திய நீண்ட பயணம் (Long March) வரலாற்றுப் புகழ்மிக்கது. ஆனால் அந்நீண்ட பயணம் அவன் வாழ்வில் ஒரே ஒரு கால கட்டத்தில் மட்டுமே நடந்துமுடிந்த நிகழ்ச்சித் தொகுப்பாகும். ஆனால் தலைவர் கலைஞரின் வாழ்வே ஒரு நீண்ட பயணம்—தொடர் பயணம். அப்பயணத்தில் அவர் சந்தித்த ஏற்ற இறக்கங்கள், உயர்வு தாழ்வுகள், வளைவு நெளிவுகள், திருப்பங்கள் அம்மம்மா! எத்தனை. எத்தனை? எண்ணிப் பார்த்தால் ஏற்படும் வியப்பும் மலைப்பும் எவ்வளவு எவ்வளவு!

தலைவர் கலைஞர் எதிர்ப்புக்கு அஞ்சியதில்லை பகைக்கும் பணிந்ததில்லை; சோதனைகளால் சோர்ந்துபோனதில்லை; அடை மழைக்கும், கடும் வெயிலுக்கும், கடும் புயலுக்கும் அசையாது நிமிர்ந்து நிற்கிறது பனி இமயம். எதிர்ப்புகளுக்கும் பணிந்து கொடுக்காது; குனிந்து போகாது; நிமிர்ந்து நிற்கும். தலைவர் கலைஞர் அரசியல் அரங்கில் ஓர் பெரும் இமயம்.

கல்லூரிப் பட்டம் பெற்று நேரே அரசியல் மேடை ஏறி ஒலிபெருக்கிக்கு முன் நின்று உரக்கப் பேசி தலைவர்களானவர்கள் சிலர் உண்டு. அவர்கள் துண்டேந்தி காசு சேர்த்து பேச்சாளர்களை அழைத்து மேடை அமைத்துக் கூட்டம் நடத்தியதில்லை. கூட்டத்தில் பேசி மட்டுமே பழகியவர்கள். ஆனால் தலைவர் கலைஞரோ கூட்டங்கள் நடத்தியவர் கூட்டங்களில் பேசியவர்,

மாநாட்டு மேடைகளில் மார்தட்டி முழங்கி மட்டுமே தலைவர்களானவர்கள் சிலர்; அவர்கள் மாநாடுகளை நடத்திப் பயிற்சி பெற்றவர்கள் இல்லை. ஆனால் தலைவர் கலைஞருக்கோ மாநாடுகளை நடத்திய பயிற்சியும் உண்டு; மாநாடுகளுக்குத் தலைமை ஏற்கும் பழக்கமும் உண்டு.

சில தலைவர்களுக்குத் தொண்டர்களாக இருந்த அனுபவம் இருந்ததில்லை அவர்கள் தொண்டர்களாக இருந்து தலைவர்களாகப் பரிணாம வளர்ச்சி பெற்றவர்கள் இல்லை. தலைவர்களாகவே படைக்கப்பெற்ற 'அதிர்ஷ்டசாலி'கள் அவர்கள். ஆனால் தலைவர் கலைஞரோ தொண்டராக இருந்து படிப்படியாக தலைவராக வளர்ந்தோங்கியவர். அவர் பலகாலம் நல்ல தொண்டராக இருந்தவர். எனவே நல்ல தலைவராக இருக்கிறவர். சிலரோ நல்ல தொண்டர்களாக இருந்ததில்லை. எனவே நல்ல தலைவர்களாகவும் இருக்க முடியவில்லை.

தலைவர் கலைஞரோ கண்டது கற்கப் பண்டிதரானவர் இல்லை. முறையாகக் கற்றுத் தேர்ந்த அரசியல் பண்டிதர். எனவே திடீர்த் தலைவர்கள் சந்தர்ப்பத் தலைவர்கள், தற்காலிகத் தலைவர்கள், தொண்டர் அணியில்லாத் தனிமரத் தலைவர்கள் விபத்துத் தலைவர்கள், கவர்ச்சித் தலைவர்கள்— எல்லாம் கலைஞருக்கு முன்னால் ஒடிந்து வீழ்வது, ஓடி ஒளிவது, பணிந்து குனிவது குனிந்து படிவது தவிர்க்க முடியாத வரலாற்று நிர்பந்தமாகிறது; காலக் கட்டளையாகிறது.

தலைவர் கலைஞரின் அரசியல் நெடும் பயணத்தில் அவர் சந்தித்த சதுப்பு நிலப் பரப்புகள், பாலைவனப் பிரதேசங்கள், ஏறிய பனிமலைத்தொடர்கள், தாண்டிய காட்டாறுகள் ஏராளம், ஏராளம்! அப்பப்பா, அவற்றை நினைத்தால் உடல் பதறுகிறது உள்ளம் நடுங்குகிறது. ஆனால் அவைகளை அவர் சந்தித்ததை — சமாளித்ததை நினைத்தால் மலைப்பு மலைபோல் உயர்கிறது.

1976–ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 31–ஆம் நாள் இரவு. ஆட்சி கவிழ்க்கப்பட்ட செய்தி அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டு சற்றுநேரம் ஆகிறது. அப்போதுவரை அமைச்சராத இருந்த முன்னாள் அமைச்சர் இராசாங்கம் வருகிறார். 'இராசாங்கம் மட்டுமே நம்மிடம். ஆனால் பரிபாலனம் பறிபோய்விட்டது" என்று புன்முறுவலோடு கலைஞர் கூறுகிறார். கூடி இருந்தவர்கள் 'கல' 'கல' வெனச் சிரிக்கிறார்கள். சூழ்நிலையின் இறுக்கம் கட்டவிழ்ந்து தளர்கிறது. கனம் குறைந்து இலேசாகிறது. ஆட்சி கவிழ்ந்த அந்த நேரத்திலும் கலைஞர் கலங்கிடவில்லை

ஆனால் மறுநாள் காலை, அவரைச் சந்திக்கிறேன். காலைக் கடன்களைக்கூட முடிக்காதுஇருக்கிறார். தொலைபேசிகள் எல்லாம் துண்டிக்கப்பட்ட நிலை. இரவில் அவருக்கு நெஞ்சுவலி. மருத்துவர்களைக்கூடத் தொடர்பு கொள்ளமுடியவில்லை. அவரைப்பார்த்தபோது என் உள்ளம் பாகாய் உருகுகிறது; பனிக் கட்டியாய்க்கரைகிறது. மருத்துவரைக் கூடத் தொடர்பு கொள்ள முடியாத நிலையறிந்து நெஞ்சம் நெருப்பிலிட்ட மெழுகாகிறது. "நான் சென்று வருகிறேன். முடிந்ததைச் செய்கிறேன். சந்தர்ப்பம் இருந்தால் மீண்டும் சந்திக்கிறேன்" நா தழுதழுக்க நான் விடைபெறுகிறேன். கலைஞருக்கோ கண்கள் கலங்குகின்றன.

எப்படி அவர் அந்த இருண்ட காலத்தைக் கடந்து வந்தார்? எண்ணிப் பார்த்தால் இதயம் நடுங்குகிறது

அந்த இருண்ட காலத்தில் ஒரு நாள் தலைவர் தம் நண்பர் ஒருவர்வீட்டுத் திருமணத்திற்குச் செல்கிறார். அவரோடு நானும் செல்கிறேன். தலைவர் திருமண மண்டபத்திற்குள் நுழைகிறார்; ஒரு சகோதரர் மண்டபத்தைவிட்டுவெளியேறுகிறார். வெளியேறும் அச்சகோதரர் உட்புகும் தலைவரைக் கண்டும் காணதவரைப் போல தலைகுனிந்தவாறே ஒரு பக்கமாக ஒதுங்கிச் செல்கிறார். அச்சகோதரர் கழகத்தில் நீண்ட காலம் அங்கம் வகித்தவர்; கழகம் வழங்கிய அந்தஸ்தை அனுபவித்தவர்; தலைவரிடம் 'சகோதரர்' என்று உறவு கொண்டாடியவர்; உரிமை பாராட்டியவர். கண்டும் காணாதவர் போல ஒதுங்கிச் செல்கிறார் பாவம் அவர் என்ன செய்வார்? அவசர காலமாயிற்றே! ஆனால் அதே நேரத்தில் தலைவரின் நுழைவால் திருமண மண்டபமே மின் அலைப் பரவலுக்கு ஆளாகிறது. செட்டிநாட்டரசர் எழுந்து வந்து தலைவரை எதிர்கொண்டு அழைக்கிறார்

அதுவும் எப்படி? தலைவரைக் கட்டித் தழுவி தம் நீண்ட கரங்களை தலைவரின் தோள்களில் தவழவிட்டு அணைத்து அழைத்துச் சென்று தம்பக்கத்தில் உட்கார வைத்து உரையாடிக்கொண்டிருக்கிறார். பக்கத்தில் இருக்க வேண்டிய சகோதரர் பயந்து ஒதுங்கி மறைகிறார், செட்டிநாட்டரசரோ பக்கத்தில் அமர்ந்து நலம் விசாரிக்கிறார்.

அந்த இருண்ட காலத்தில் இதயத்தை உருக்கும் நிகழ்ச்சிகள் எத்தனை நடக்கின்றன. கூடிக் குலவியவர்கள் குழிபறித்தனர். பக்கத்தில் இருந்தவர்கள் பள்ளம் பறித்தனர். நண்பர்கள் சிலர் துரோகிகளாகமாறினர். காவலர்களாக இருக்க வேண்டிய சிலர் காட்டிக் கொடுத்தனர். அற்ற குளத்து அறுநீர்ப் பறவைகளாயினர் சிலர். எத்தனை இரகசிய சந்திப்புக்கள்! எத்தனை இருட்டறை ஒப்பந்தங்கள்! எத்தனை சதித் திட்டங்கள்! எத்தனை கண்டனச் சுற்றறிக்கைகள் எத்தனை காட்டிக் கொடுக்கும் பத்திரிகைப் பேட்டிகள்!

ஒருவர் தலைவரின் தயவால் அமைச்சரானவர். அவரின் கழகத் தொண்டு 67 வரை உதவிப்பொறியாளராகஇருந்தது தான். அப்பப்பா அவர் தலைவரைத் தலைமைப் பொறுப்பிலிருந்து இறக்க எடுத்த முயற்சிகள் எத்தனை? யார் யார் அவருக்குத் துணையாக இருந்தனர்! யார் யார் அவருக்குத் தூபம் போட்டனர்! அத்தனையும் எந்த நேரத்தில்? இந்திரா காந்தியின் அடக்கு முறைக்

எஸ். ஜீவ

கணைகள் பாய்ந்துகொண்டிருந்த நேரத்தில் கலைஞரின் கரங்கள் கட்டப்பட்டிருந்த காலத்தில் வாய் பூட்டப்பட்டிருந்த நேரத்தில், 'முரசொலி' அதிகாரிகளின் முற்றுகைக்கு ஆளானபோது, தலைவரின் இல்லங்கள் அதிகாரிகளின் படையெடுப்புகளுக்கு இலக்கான போது நீதி விசாரணைகள் நடந்துகொண்டிருந்த போது; வழக்குகள் தொடுக்கப்பட்ட வண்ணம் இருந்தபோது துணையாக இருக்க வேண்டியவர்கள் சிலர் துரோகிகளாக மாறிக் கொண்டிருந்தனர். கனிவு காட்ட வேண்டியவர்கள் காட்டிக் கொடுத்துக்கொண்டிருந்தனர். உதவி செய்ய வேண்டியவர்கள் உபத்திரவம் விளைவித்துக்கொண்டிருந்தனர். ஆறுதல் அளிக்க வேண்டியவர்கள் ஆழக் குழிதோண்டிக் கொண்டிருந்தனர் இவைகளை எல்லாம் தலைவர் எப்படித் தாங்கிக்கொண்டிருந்தார்!

நான் தலைவரைப் புரிந்து கொண்டது உண்டு. அவர் தொண்டினை தியாகத்தைத் திறமையைப் புரிந்துகொண்டது. உண்டு. ஆனால் ஒன்றை மட்டும் என்னால் புரிந்து கொள்ளமுடியவில்லை.

நண்பர்கள் சிலர் கண்டனக் கணைகளை ஏவினார்கள்! கலைஞர் அவைகளைத் தாங்கிக் கொண்டார். என்னால் அதைப் புரிந்துகொள்ள முடிகிறது. அதிகாரிகள் எழுதிக் கொடுத்த மன்னிப்புக் கடிதங்களில் சிலர் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தது உண்டு. அக் கடிதங்களில் எத்தனை 'அர்ச்சனைகள்' எத்தனை 'ஆராதனைகள்' தலைவருக்கு. தலைவர் அவைகளைத் தாங்கிக் கொண்டார்! என்னால் அதைப் புரிந்து கொள்ள முடிகிறது.

ஆனால் அப்படித் தடுமாறியவர்கள், தடுக்கி விழுந்தவர்கள், தடம்புரண்டு போனவர்கள் அவர்களிலே சிலர் தலைவரிடம் முன்னுரிமை இன்றைக்குக் கோருகிறார்களே அதைக்கூட என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் தலைவர் எதுவுமே நிகழாதது போல எப்போதும்போல் சிரித்த முகத்தோடு அவர்களை வரவேற்று உபசரிக்கிறாரே அதுதான் எப்படி அவரால் முடிகிறது என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை! இருண்டகாலத்தில் ஒளிந்தவர்கள், ஒதுங்கியவர்கள் தலைவரை ஒதுக்கியவர்கள் அவர்களிலே சிலர் இன்று தலைவருக்குப் பக்கத்தில் அமரும் தனி உரிமையை எடுத்துக் கொள்வதைக்கூட என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால் அவர்களுக்கு அந்த முன்னுரிமை இன்றும் தலைவரிடமிருந்து கிடைக்கிறதே அதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

பகைவனும் மொழியக் கூசும் பழிமொழிகளைப் பொழிந்தவர்கள் இன்று பாராட்டு மழை பொழிவதைக்கூட என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. ஆனால் அந்தப் பாராட்டு மழையில் நனையும் தலைவர் என்ன கருதிக்கொள்கிறார் என்பதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை புரிந்து கொள்ள முடியவில்லை என்பதுகூட இல்லை; அதைப் புரிந்து கொள்ள நான் முயற்சிப்பதுகூட இல்லை. புரிந்து கொள்ள முயற்சிக்கவே விரும்புவதில்லை. ஆம் உள்ளத்தின் அடியாழம் வரை கசக்கும் நஞ்சைப் புரிந்து கொள்ள விரும்பவே இல்லை!

இந்தி படிக்க ஆர்வமில்லை!

சீனத்தின் தலைநகரான பீகிங்கில் உள்ள பீகிங் பல்கலைக் கழகத்தில் சீன மாணவர்கள் இந்தி படித்திட ஏற்பாடுகள் செய்துள்ளார்கள்.

அதன்படி அந்த மொழியைக் கற்றுத் தருவதற்காகப் பதின்மூன்று, பேராசிரியர்களை நியமித்துள்ளனர். ஏழாயிரம் மாணவர்கள் படிக்கின்ற இப்பல்கலைக்கழகத்தில் இதுவரை ஒரு மாணவனும் இந்திமொழியைப் படிக்க முன்வரவில்லை. பேராசிரியர்களுக்கும் கற்பிக்க வாய்ப்பும் இல்லை இந்தியாவிலேயே இந்தி மொழியைக் கற்றிட விரும்பாதவர்களே கோடிக்கணக்கிலே உள்ளபோது பீகிங்கில் இந்தியைப் படிக்க எவர் வருவார். உள்நாட்டிலேயே மதிப்பில்லாத மொழிக்கு வெளிநாட்டில் வரவேற்பு இருக்குமா?

புருஷன்

தென்னரசு



(4)

“எதற்காக நான் அவரிடம் வாழ்க்கைப் பணம் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும்? குழந்தை குட்டிகள் இருந்தால் வாழ்க்கைப் பணம் பெறுவதில் அர்த்தம் இருக்கிறது. எதுவுமில்லாத நான் ஏன் அவரிடம் பணம் பெறுகிறேன்? பணம் இல்லாவிட்டால் கெட்டுப்போவேன் என்று கொடுக்கிறார்களோ? நான் அவரை மனப்பூர்வமாக விரும்புகிறேன்; உழைத்துச் சாப்பிட்டால் போகிறது; வாழ்க்கைப் பணம் வாங்கிக் கொண்டிருந்தால் ஊரில் இருப்பவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்? இந்தப் பணத்திற்காகத்தான் குருவம்மா புருஷன் மீது பாசம் இருப்பது போல் நடித்துக் கொண்டிருக்கிறாள் என்று கேலி செய்யமாட்டார்களா?” குருவம்மாவின் மனசில் பூமணலில் தெரியும் பூச்சிக்கால் தடம்போல் லேசாகப் பதிந்திருந்த எண்ணம் அன்று பேய் உருவெடுத்து எழுந்துவிட்டது செண்பகஞ்சேர்வையின் வருகைக்காகவ அவள் காத்திருந்தாள் முனிசாலைக்கு வேலைக்குப் போனவன் இரவு ஒன்பது மணிவரை வரவில்லை. வெகு நேரத்திற்குப் பிறகு யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது

குருவம்மா கதவைத் திறந்தாள் ‘அய்பாவுக்கு முதுவுலே செவரு விழுந்திருச்சு; பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயாச்சு” என்றான் வந்தவன்

விளக்கணைந்த வீடுபோல் அவள் உள்ளம குப்பென்று இருண்டுவிட்டது. அடுப்படியில் நின்றவளைப்போல் அவளது மேனி முழுவதும் வியர்வை பூத்தது ஆற்றுவார், தேற்றுவார்—எல்லாமாக இருந்துவரும் தந்தை இறந்துவிட்டால் என்ன ஆகும் என் கதி?—ஒருகணம் குருவம்மா திக்குமுக்காடிப் போனாள். குறுக்குப் பாதையில் ஆற்றுக்குள் விழுந்தடித்துக்கொண்டு மருத்துவமனைக்கு ஓடினாள் அங்கே செண்பகஞ்சேர்வைக்கு முதுகில் தையல் போட்டுக்கொண்டிருந்தார்கள். சேர்வையைப் பார்ப்பதற்கு டாக்டர்கள் குருவம்மாவுக்கு அனுமதி தர மறுத்துவிட்டார்கள் ஆனால், காயம ஒன்றும் பெரிதல்ல, ஒரு மாதத்தில் சரியாகிவிடும் என்று அவர்களே குருவம்மாவுக்கு ஆறுதலும் சொன்னார்கள்.

மறுநாள் காலை குருவம்மா செண்பகஞ் சேர்வையைப் பார்த்து அவனைக் கட்டிக்கொண்டு அழுதாள். அன்று முதல் அவள் ஒவ்வொரு நாளும் மாலைவரை செண்பகத்தின் அருகில் இருந்துவிட்டு இரவு படுக்கைக்கு மட்டும் வீட்டுக்கு வந்தாள். குருவம்மா வீட்டுக்குப் புறப்படும் போதெல்லாம, “பத்திரம்! கதவை நல்லா தாள் போட்டுக்கம்மா!” என்று தொட்டுத் தொட்டு சொல்லியனுப்புவான் செண்பகம்.

குடும்பக்கௌரவத்தைப் பாதுகாத்துக் கொள்வதில் செண்பகத்தைக் காட்டிலும் குருவம்மாவுக்கு இரண்டு மடங்கு அக்கறை ஒவ்வொரு நாளும் முகப்புக் கதவைக் கெட்டியான பூட்டுப் போட்டே பூட்டிக்கொண்டு விட்டாள் அவள்.

ஃ ஃ ஃ

பத்து நாட்களுக்குப் பிறகு ஒருநாள் நடுநிசியில் கதவு தட்டும் ஓசை கேட்டது. செண்பகத்திற்குத்தான் எதுவும் நேர்ந்துவிட்டதோ என்று திகிலடைந்து ஓடிவந்து கதவைத் திறந்தாள் குருவம்மா.

என்ன! அவள் எதிர்பாராதது ஏன்? கனவிலேகூட கண்டிராதது அப்போது நடந்தது ஆம்; அவளது கணவன் தின்னாயிரம் வாசலில் நின்றான். குருவம்மா கதவைத் திறந்ததும் ரிக்ஷாக்காரன் “ஐயா கடும் போதையிலே இருக்காரு! பட்டை!’ என்றான் குருவம்மா வெலவெலத்துப் போனாள்.

மனித மனம் துயரத்தால் மட்டும்தான் அதிர்ச்சி அடைகிறதா? ஏன், லாட்டரிச் சீட்டில் இலட்ச ரூபாய் விழுந்துவிட்டால் கூடத்தான் அதிர்ச்சியடைகிறது! குருவம்மாவுக்கு இப்போது ஏறபட்டுள்ள அதிர்ச்சி எந்த வகையைச் சேர்ந்தது? அவள் முகம் வியர்வையில் வெதும்பியது.

எதிர் பிளாட்பாரத்தில் பல பேர் கட்டில் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். போலீஸ் வாகனம் ஒன்று அந்த வழியாக கடந்து சென்றது. தூத்துக்குடி நாகர்கோயில், திருவனந்தபுரம் செல்லும் லாரிகள், கிட்டங்கிகளில் சரக்குகளை ஏற்றிக் கொண்டிருந்தன.

ரிக்ஷாவிலிருந்து தின்னாயிரத்தை, குருவம்மாவும் ரிக்ஷாக்காரனும் தாங்கிப் பிடித்து தூறச்சி உள்ளே கொண்டு வந்தார்கள். அவனது சுடுமூச்சு குருவம்மாவின் தோள்பட்டையில் பட்டு வெதுவெதுத்தது. திகைப்பினால் குழப்பத்தினால் அவளது உடம்பெல்லாம் துளிர்த்திருந்த வியர்வைத் துளிகள் தின்னாயிரத்தின் மார்பில், நெற்றியில், கன்னத்தில் தெறித்து அவனுக்கு உடல் கசகசத்தது.

“குருவம்மா!”

“ம்.....ம்!”

“மா......மா.........எங்கே போய்ட்டாங்க?”

“ஆசுப்பத்திரியிலே இருக்காங்க!’ அதற்குமேல் பேச அவள் திணறினாள்.

நிம்மதி! அமைதி’ ஒன்றை ஒன்று வெட்டும் நோக்கோடு சுளைப்போல் அவர்கள் விடும் மூச்சுக்கள் மட்டும் அடிக்கடி குறுக்கிட்டுக் கொண்டன. கொஞ்ச நேரத்திற்குப் பிறகு, ஏதோ ஒரு ஓசை—தரையைத் தடவும் ஓசை கேட்டது.

“என்ன குருவம்மா! என்ன தேடுறே”

“ஒன்றுமில்லே, விசிறி தேடுறேன்” என்று சொல்லி ஒரு தென்னை ஓலை விசிறியால் விசிறினாள்.

மீண்டும் மௌனம்! அடுப்படியில் ஏதோ சத்தம் கேட்டு குருவம்மா எழுந்தாள்.

“பூனைதான் உக்காரு” என்று சொல்லி தின்னாயிரம் அவளைத் தன் மடிமீது இழுத்துப் போட்டுக் கொண்டான்.

“இப்பத்தான் நெனைப்பு வந்துச்சாக்கும்!” குருவம்மா கொஞ்சம் இடக்காகப் பேசினாள். தின்னாயிரம் செல்லமாக அவள் கன்னத்தில் தட்டினான். அவள் பதில் பேசவில்லை. சட்டைப் பையில் கிடந்த தீப்பெட்டியை எடுத்து உரசி அவள் முகத்தருகே காட்டினான். குருவம்மாவின் கடைக்கண்களில் நீர் பழுத்திருந்தது தின்னாயிரம் அவள் தலையைத் தன் நெஞ்சில் அணைத்துக் கொண்டான்.

ஃ ஃ ஃ

‘குருவம்மா! குருவம்மா இப்படித் தூங்கறே!” குருவம்மா கெட்ட கனவு கண்டவளைப்போல் திடுக்கிட்டு! விழித்தாள். எதிரே தயிர்க்காரி நின்றாள்.

“உனக்கு யாரு கதவு தெறந்தது!’

“கதவு தெறந்துதானே கெடந்தது ராத்திரி தாப்பாப் போட மறந்துட்டியா? ஒரு நாளைப்போல இருக்குமா? கள்ளன் பெரிசா. காப்பான் பெரிசா? தயிர்க்காரி விசனித்துவிட்டுப் போனாள்.

குருவம்மாவுக்குப் பித்துப் பிடித்ததுபோல் இருந்தது

“தூங்கு மானமதுரைக் இப் போயிட்டு இன்னைக்கி மாதிரி ராத்திரிக்கு வர்றேன்” என்று விடியற்காலையில் தின்னாயிரம் சொல்லிவிட்டுப் போனதுபோல் அவளுக்கு நினைவு — அரைகுறை நினைவுதான் அன்றைய பகல் பொழுதுபோவது அவளுக்கு ஒரு யுகம் கழிவதுபோல் இருந்தது. எப்படியோ போய்விட்டது

குருவம்மா மீன் குழம்பு செய்துவைத்தாள். தின்னாயிரத்துக்கு மீன் குழம்புச் சாப்பாடு என்றால் உயிர்தான்.

அவள், அப்பாவைப் பார்க்க வேண்டாமா!—எண்ணங்கள் ஒன்றை ஒன்று முந்திக் கொண்டு வந்தன. ஒரு ரிக்ஷாவை அமர்த்திக் கொண்டு வேகமாகப் போனாள். ஆனால், போவதற்குள் மருத்துவமனை வாசல் கதவை மூடிவிட்டார்கள். நேரம் கடந்துவிட்டதாம்!

அண்ணாந்து பார்த்தாள் மேல் தளத்தில்செண்பகத்தின் அறை ஜன்னல் திறந்திருந்தது அதை பார்த்த குருவம்மாவிற்குத் துக்கம் தொண்டையைக் கவ்வியது.

நள்ளிரவு; சிந்தாமணி சினிமாக் கொட்டகையில் இரண்டாவது காட்சி முடிந்து கூட்டம் அலை அலையாகப் பிரிந்து கொண்டிருந்தது.

குருவம்மா வாசல் திண்ணையில் உட்கார்ந்து கொண்டு ஒவ்வொரு ரிக்ஷாவையும் கூர்ந்து பார்த்தாள். மணியாடரை எதிர்பார்க்கும் கல்லூரி மாணவனைப்போல் தாகமும் பின் தளர்ச்சியுமான அவள் மனம் மாறி மாறிப் புரண்டது.

அவர் வரமாட்டாரோ! எளவளவு களைத்துப் போய் விட்டார்! ஆறு மாசங்கள் கூட ஆகல்லியே அதுக்குள்ளாக இப்படிப் போயிட்டாரே!’ குருவம்மா இப்படி எண்ணிக் கொண்டிருக்கும போதே ஒரு குதிரை வண்டியில் வந்து இறங்கினான் தின்னாயிரம் நேற்றைப்போல் தின்னாயிரம் இன்று குடிவெறியில் இல்லை; நிதானமாக இருந்தான் வண்டியிலிருந்த பழக்கூடையையும். துணிவு பொட்டலத்தையும் வண்டிக்காரன் எடுத்து வந்தான்.

“குருவம்மா இதை வாங்கிக்க!”

“எல்லாம் சாப்புட்டுப் பேசலாம் உள்ளே வாங்க!”

சின்னக் குழந்தையைப் போல் தின்னாயிரம் குருவம்மாவைப் பின் தொடர்ந்து போனான்.

“ஏன் இவ்வளவு நேரமாச்சு!”

“ஜட்கா கெடெச்சாத்தானே! சினிமா வுட்ற நேரம் —அதாலே ஒருத்தனும் அகப்படலே! அதுசரி; மாமாவுக்கு எப்படியிருக்கு பாத்தியா?’ தின்னாயிரத்தின் விசாரணையில்தான் எவ்வளவு அனுதாப உணர்ச்சி?

“போனேன்; ஆனா அப்பாவைத்தான் பார்க்க முடியல்லே! நேரமாச்சுன்னு கேட்டைச் சாத்திட்டாங்க, நாளைக்கித்தான் போகணும். நீங்க அப்பாவைப் பார்க்கவேணுமா?’

“பார்க்காமலா இருப்பேன்! ஆனா ஒன்னு குருவம்மா. நான் போயி மாமாவைப் பார்க்கிறவரைக்கும் நீ ஒன்றும் சொல்லிடாதே! ஒன்னைத்தான் கோவிச்சுக்குவாரு! பாரு என்ன இருந்தாலும் புருஷன் வந்ததும் என்னை ஒரு வார்த்தை கேக்காம சோறு சமைச்சுப் போட்டாளேன்னு நெனைப்பாரு. பாக்கிறமாதிரிப் பாத்துட்டு வந்துட்டா எல்லாஞ் சரியாப் போயிடும்” தின்னாயிரம் எவ்வளவு உரிமையோடு சொன்னான் தெரியுமா?

“நானும் அதுமாதிரித்தான் நெனைச்சேன், அப்பாகிட்டே எப்படித்தான் இதைச் சொல்றதுன்னு இன்னிக்கிப் பூரா யோசிச்சுக்கிட்டே இருந்தேன்” என்றாள் குருவம்மா!

“இந்தா உனக்குப் பொடவை! நாளைக்கே நீ கட்டிக்கணும்!” என்றான்

“உஹூம்! மாட்டேன். அப்பா ஏது பொடவையின்னு கேப்பாரு!’

“அவரு ஆஸ்பத்திரியிலேயிருந்து வந்துதானே கேக்கணும்! அதுக்குள்ளேதான் அவரைப் போயிப் பார்த்து ராசியாயிடுவேனே?”

குருவம்மா மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு, புருஷன் சிறந்த புத்திசாலி என்று அவளுக்குள்ளே நினைத்துக் கொள்வது போலிருந்தது.

குருவம்மா மீன் குழம்புச் சோறு படைத்தாள். தலையைக் குனிந்தபடி தின்னாயிரம் உணவுண்டான்.

“குருவம்மா, நேற்று என்ன தேதி தெரியுமா?” தின்னாயிரம் வியப்போடு கேட்டான்.

‘நான் எதைக் கண்டேன்?’ குருவம்மா சொன்னாள்

“ஆவணி ஆறு! மூனு வருஷங்களுக்கு முன்னாலே இதே ஆவணி ஆறிலேதான் நமக்குக் கல்யாணம்! தெரிஞ்சுதா?’ தின்னாயிரத்தின் குரலில் உணர்ச்சி பொங்கியது.

குருவம்மா திருமண நாளன்று இரவு எவ்வளவு

[8-ம் பக்கம் பார்க்க]

மாவட்டச் செயலாளர்கட்கு....!

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தி. மு. க. மாவட்டச் செயலாளர்கள் தங்கள் புகைப்படத்தையும் (Passport size) வாழ்க்கைக் குறிப்புகளையும் (சுருக்கமாக) ‘நம் நாடு’ இதழுக்கு உடன் அனுப்பிவைக்க வேண்டுகிறோம்.

—ஆசிரியர் குழு,

‘நம் நாடு’ சென்னை - 18.

இரண்டொரு நாட்கள் ஆழ்ந்த யோசனைக்குப் பிறகு அவள், கோவிற் பணிபுரியும் சிற்பிகளை அழைத்துத் தன் முடிவை வெளியிட்டாள்; அதாவது, 'நாள் தோறும் மாலைப் பொழுதில் இருபது சிற்பிகள் — வேலை முடிந்ததும் அவள் அளிக்கும் உணவை ஏற்றுக் கொள்ள வேண்டும்' என்பதுதான்!

'நாள்தோறும் இருபது பேர்' என்ற வரிசையில், பட்டியல் மாறி மாறி வரும்; அனைவருக்கும் ஏக காலத்தில் உணவளிக்க அவளால் இயலாது.

கிழவியின் உணர்ச்சியையும் உள்ளன்பையும், சோழ நாட்டின் மீது வைத்துள்ள பற்றையும் பாசத்தையும் புரிந்து கொண்ட சிற்பிகளும் அவளது வேண்டுகோளுக்கு இணங்கினர்.

அந்திப் பொழுதில் அழகிக் கிழவியின் வீட்டுச் சாப்பாட்டு முறை யென்றால், ஒரே கொண்டாட்டம்தான்; அவள் வளர்த்த ஆடுகள் ஒவ்வொன்றாகக் குறைந்து கொண்டு வருவதைச் சிற்பிகள் கவனித்தார்கள்; அவைகளை விற்றுத்தான் அவளால் சிற்பிகளுக்கு விருந்து வைக்க முடிந்தது.

ஆடுகள் குறைந்து விட்டதைப் பற்றி அவளுக்குத் துளியளவு கூடக் கவலை ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

சிற்பிகள் ஒரு நாள் — கோயில் வேலைகளைக் கவனிக்க வந்திருந்த இராசேந்திரனிடம் — கிழவி அழகியின் தூய்மையான அன்பு பற்றியும் கடமை உணர்ச்சி பற்றியும் கூறிப் புகழ்ந்தார்கள்.

மறுநாள் இரவு கிழவியின் வீட்டு வாயிற்புறத்தில் ஆயிரம் ஆடுகள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன.

காலையில், அவைகளைக்கண்ட கிழவி, 'ஆண்டவனின் லீலா விநோதம்தான் இது' என்று ஆனந்தக் கூத்தாடினாள்; 'இராசேந்திரனின் நல்லுதவி என்பது அவளுக்குத் தெரியாமலே போய்விட்டது; அவளை இராசேந்திரன் அழைத்து வரச் செய்து — தன் தந்தையிடம் அறிமுகப்படுத்தி வைத்தான்; அப்போதும் அவள், 'ஆடுகளை ஆண்டவன் அளித்தான்' என்றுதான் சொன்னாள்.

கிழவியின் ஆர்வத்தைக் கண்ட இராசராசன் — அவளைப் பார்த்துக் கனிவுடன், 'அம்மையே — உமது விருப்பம் ஏதாவது இருப்பின் தெரிவிக்கலாம்; உடனே நிறைவேற்றுவதற்கு வழி செய்வேன்' என்றுரைத்தான்!

"சக்கரவர்த்தியார் அவர்களே — தங்கள் திருவாயால் என்னை, 'அம்மையே' என்று அழைத்ததைவிட வேறென்ன பாக்கியம் இருக்கப் போகிறது எனக்கு! தங்களின் அழியாத பெயரை ஆண்டாண்டுக் காலத்திற்கும் சொல்லிக் கொண்டிருக்கப் போகும் இராசராசேச்சரத்தில் பணிபுரியும் சிற்பிகளுக்கு உணவு அளித்த பெருமை ஒன்றே எனக்குப் போது" என்றும் கூறி, மன்னனின் திருவடிகளில் விழுந்து வணங்கப்போன கிழவி அழகியை மன்னன் தடுத்து நிறுத்தி 'அம்மையே — உமது வெள்ளை உள்ளத்தை நான் புரிந்து கொண்டேன்; மன்னன் செய்யும் காரியங்கள் மன்னனுக்கு மட்டும் சிறப்பூட்டுவன அல்ல, அப்படி இருக்கவும் கூடாது என்பது என் விருப்பம்; சோழப் பேரரசின் மேன்மைக்கு யார் பாடுபாடுகின்றார்களோ அவர்கள் யாராயிருப்பினும் — என் நன்றிக்குரியவர்கள்; என் ஒருவனுடைய தனி ஆற்றலால் விளைந்தது அல்ல இன்றையச் சோழ மண்டலம்; இதோ நிற்கும் என் வீர மைந்தனின் வாள் வலிமையால் மட்டும் ஏற்பட்டதல்ல இந்தப் பேரரசு; எத்தனையோ சோழகுல மாணிக்கங்களின் வீரத் தோள்களும் — தங்களைப் போன்ற மாதாக்களின் நல்வாழ்த்துக்களும் உருவாக்கிய அரசு இது; நான், தங்கள் நிழலில்தானம்மா நின்று கொண்டிருக்கிறேன்; அதனால் தாராளமாகக் கேளுங்கள் — தங்களுக்கு வேண்டியதை' என்று பரிவுடன் கூறினான் அரசன்!



கிழவி ஏதோ சொல்ல வாயெடுத்துச் சற்றுத் தயங்கிப் பின்னர் தொடர்ந்தாள் — "மன்னர்மன்னா; ஏழையின் விண்ணபம் ஒன்று உண்டு. கோயிலில் அமைக்கப்படும் விமானத்தின் மேல் தளத்திற்குப் பெரிய அளவில் — ஒரே கல்லாக ஒன்று வேண்டுமென்று சிற்பிகள் சொல்லக் கேட்டேன்; அப்படிப்பட்ட கல் ஒன்று என் வசம் இருக்கிறது; அதனை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்' — இதைச் சொல்லி முடிப்பதற்குள், கிழவியின் கண்களில் நீர் துளிர்த்துவிட்டது!

"ஒரே கல்லா?" — அரசன் வியப்புடன் சிற்பிகளைப் பார்த்துக் கேட்டான்.

"ஆம் — அரசர் பெருமானே! விமானத்தின் மீது ஒரே கல்லில் தளம் அமைப்பது சிறப்புடையதாக இருக்கும் என்று கண்டராதித்தர் கூடக் கருத்துத் தெரிவித்தார்; இளவரசர் அவர்களும் அதனை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்" என்றனர் பணிவுடன் சிற்பிகள்!

"விமானம் விண்ணைத் தொடவல்லதாய் அமைகிறது; அதன் உச்சியிலே கொண்டுபோய் மிகப் பெரும்

(2)

கல்லை ஏற்றுவதென்றால் சாத்தியமாகுமா?" என்ற கேள்வியை இராசராசன் எழுப்பினான்.

உடனே கிழவி — மிக மரியாதையுடன் தலைவணங்கி 'அரசர்க்கரசே — என் வீட்டிலிருந்து சாரம் ஒன்று கட்டினால் கோபுரத்தின் உச்சிக்கு அந்தக் கல்லை ஏற்றுவது மிகச் சுலபமாக இருக்கும்; என வீட்டுக்கும் — கோபுரத்திற்கும் இடையே நான்கு கல் தொலைவு இருக்கும்; அங்கிருந்து சாரம் கட்டினால் — கல்லைச் சாலையில் உருட்டிக் கொண்டு போவதுபோல — சாரத்தில் உருட்டிச் சென்று விமானத்தில் ஏற்றிவிடலாம்' என்று வழி சொல்லிக் கொடுத்தாள்.

அவளது வியத்தகு அறிவினைக் கண்டு சோழப் பெருவேந்தன் திகைத்துப் போனான்; அவள் அளிக்கும் கல்லை விமானத்தளமாகப் பயன்படுத்த அவன் முடிவு செய்துவிட்டான்; அந்த முடிவினைப் புன்னகை ததும்ப அறிவித்தவாறு 'ம்... நான் என்னதான் பெரிய கோயிலைக் கட்டினாலும், கடைசியில் ஆண்டவன் யாம் கிழவி அளித்த நிழலில் உவந்திருக்கின்றோம்' எனக் கூறிவிடப் போகிறார்' என்று பெருமூச்சு விட்டுக் கொண்டார்; அது ஆயாச மூச்சல்ல — ஆனந்த மூச்சு!

* * *

கிழவி கூறிய ஆலோசனைப்படியே நான்கு கல்

கருணாநிதி

தொலைவிலுள்ள அவள் வீட்டிலிருந்து சாரம் கட்டத் தொடங்கி — அதில் அந்தப் பெரும் கல்லைத் தூக்கி வைத்து — விமானத்திற்குக் கொண்டு சென்றார்கள் சிற்பிகள்; சாரம் கட்டப் பட்ட அந்த இடத்திற்கு 'சாரப்பள்ளம்' என்ற பெயரும் உடனே வழங்கத் தொடங்கிற்று!

கிழவியின் நுண்ணறிவையும் — தொண்டு உள்ளத்தையும் கௌரவிக்கும் முறையில் தஞ்சையில் 'அழகிக் குளம்' ஒன்றை வெட்டச் செய்தும் 'அழகித் தோட்டம்' ஒன்றை அமைக்கச் செய்தும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டான், அரசன்!

ஆலயம் முடிவடையும் கட்டத்தை அடைந்துவிட்டது; இராசராசனும் — இராசேந்திரனும் — குந்தவையாரும் கூறிய ஆலோசனைகளின்படி எல்லாப் பணிகளையும் கண்டராதித்தன் நிறைவேற்றிவிட்டான்; ஆனால், அரசன் விரும்பியவாறு நூற்றெட்டுத் தாண்டவ நிலைகளைத்தான் இன்னும் செதுக்கத் தொடங்கவில்லை; அது இராசராசன் இதயத்தில் பெருங்குறையாகவே இருந்தது; அந்த வேலை நிறைவு பெறுவதில் அவனுக்கு நிம்மதி கிடையாது.

சோழன் மாளிகையில், அதுபற்றி விரிவான பேச்சு அரங்கம் ஒன்றே ஏற்பாடாயிற்று; கண்டராதித்தனை அவசரமாக அழைத்து வரச் சொன்னான் அரசன்.

இராசராசன் — இராசேந்திரன் — அவன் மனைவி பஞ்சவன் மாதேவி — குந்தவையார் முதலிய சோழக் குடும்பத்தினர் அந்த உரையாடலில் கலந்துகொண்டனர்.

இராசராசன் மனநிலையை விளக்கிக் குந்தவையார், மிக உருக்கமாகக் கண்டராதித்தனிடம் கூறினாள்.

"அரசன் விருப்பம் என்ன காரணம் பற்றிக் கவனிக்கப் படவில்லை? இது குந்தவையாரின் கேள்வி.

"கவனிக்கப் படவில்லை என்று கற்பனை செய்வது தவறு. நாடெங்கும் தேடிப் பார்த்து — சென்ற கிழமைதான் ஒரு கைதேர்ந்த சிற்பியைக் கண்டு பிடித்தேன்' — இது கண்டராதித்தன் பதில்.

"கைதேர்ந்த சிற்பியைக் கண்டெடுத்து ஒரு கிழமையான பிறகும், சிற்ப வேலை தொடங்கப் பெறுமைக்கு என்ன விசித்திரக் காரணம் வைத்திருக்கிறாய்?' — அரசனின் ஆத்திரம்கலந்த வினாவுக்குக் கண்டராதித்தன் நிதானமாகவே பதிலுரைத்தான்.

"கல்லில் உயிரூட்டித் துள்ளவைக்கும் சிற்பி அவன்; இளம் வயதினன்தான்; ஆனால், அவனது கலையில் பண்பின் முதிர்ச்சி இருக்கிறது. கருங்கல் பாறையிலே மென்மையான மலர்களைக் கூடச் செதுக்கி விடுகிறான்; உளியைக் கையில் எடுத்து ஒரு பாறையின் முதுகில் தட்டிக் கொடுத்து விட்டு வேலையைத் தொடங்கினான் என்றால் சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தப் பாறையில் பாவை ஒருத்தி சிரிக்கிறாள்; பழம் கொத்தும் கிளியைக் காட்டுகிறான்; பண் இசைக்கும் ஆயனை — மாடனை — அனைவரையும் நம் எதிரே நிறுத்துகிறான்!"

"யார் அவன்? பெயர்!"

"மாமல்ல புரத்திலிருந்து வந்திருக்கிறான்; அவன்பெயர் இனியன்"

"அவ்வளவு ஆற்றல்படைத்தவன், தாண்டவச் சிற்பங்களை அமைக்கத் தாமதம் செய்வது ஏன் என்பதுதான் என் கேள்வி?'

"அதைத்தான் சொல்ல வருகிறேன்; தாண்டவச் சிற்பங்களை அவன் ஆக்குவதற்கு உதவியாக — நடனக் கலையை முறையே பயின்று நல்ல தேர்ச்சி பெற்ற பெண்ணொருத்தி அவன் எதிரே நின்று — தேவைப்படும் போதெல்லாம் தாண்டவ நிலைக்கேற்றவாறு பாவம் பிடித்துக் காட்ட வேண்டுமாம். அப்போதுதான் தத்துரூபமான தாண்டவ நிலைச் சிற்பங்களைச் செதுக்க முடியும்' என்று முடிவாகக் கூறிவிட்டான்!;

"ஓ — இயற்கையைக் கலையில் வடிக்கும் உண்மைக் கவிஞன் போலும்; அவன் கோரியபடி ஏற்பாடு செய்திருக்கலாமே — ஏன் தாமதம்?

"தேர்ச்சி பெற்ற நடனப் பெண்கள் யாரும் கிடைக்கவில்லை!"

"என்ன ஆச்சரியம்? நானூறு தேவ மாதர்களுக்குத் தலைக்கு ஒரு வேலி நிலம் நிபந்தம் கொடுத்து நியமித்திருக்கிறேன்; அவர்களில் ஆடத் தெரிந்தவர்கள் யாருமே இல்லையா?"

'நூறு நடன மாதர்கள் அந்தச் சிற்பிக்குமுன் ஆடிக் காட்டிவிட்டார்கள்!'

"நூறு பெண்களில் ஒருத்தி கூடத் தேறவில்லையா?"

"நக்கன் ராசராசகேசரி — நக்கன் சோழகுல சுந்தரி போன்ற ஆடற்கலை அரசிகள் எல்லாம் தங்கள் திறமை முழுதும் காட்டி ஆடிவிட்டார்கள்; அவர்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குற்றம் கூறிப் புறக்கணித்து விடுகிறான்; அவன் தீர்ப்பும் சரியானதாகத் தோன்றுகிறது!"

"அப்படியா?"

"ஆம்; அகோர தாண்டவத்தை அழகாக ஆடிக்காட்டியவள், ஆனந்தத் தாண்டவத்தில் தவறு செய்கிறாள்; அற்புதத் தாண்டவத்தை ஆடிக் காட்டிப் பாராட்டைப் பெற்றவள், திரிபுர தாண்டவத்தைத் தீ மிதிப்பதுபோல ஆடித் தீர்த்து விடுகிறாள்; இப்படியே அவர்கள் ஒதுக்கப்பட்டு விட்டார்கள்!'

சோழப் பேரரசில் கலையின் உயிர் போய்விட்டது; அதுதானே கண்டராதித்தா — இதற்குப் பொருள்? 'கலை வளர்த்த பூமி சோழ பூமி' என்ற பெருமை நிலைக்கும் என்று எண்ணிக் கிடந்தேன் — அந்த எண்ணத்திலே மண் விழுந்துவிட்டது; 'கலிங்கம் வென்றேன் — ஈழம் வென்றேன்' என்றெல்லாம் வருங்காலம் என்னைப் புகழும் போது, 'என்னுடைய ஆட்சியில் — என்னுடைய ஓர் ஆசையை நிறைவேற்ற முடியாமல் தோற்றுப் போனேன்', என்ற அவச் சொல்லும் சேர்ந்து தானே ஒலிக்கப் போகிறது? கலை வளர்ச்சிக்காகச் செலவிடப்படும் பொருட்குவியல் என்ன ஆயிற்று? முறையாகக் கலையைப் பயிற்றுவிக்கும் கலைக் கூடங்களின் தலையில் பேரிடியா விழுந்துவிட்டது — அவமானம். அவமானம் மேலைக் கடற்கரையோரத்து மன்னர்களை என் கப்பற்படை கலக்கியிருக்கிறது. 'சோழ நாட்டில் கலை கருகியது' என்ற செய்தி இப்போது என்னைக் கலக்குகிறது 'மகேந்திர மலையில் நான் நாட்டிய வெற்றித்தூண் — அதெல்லாம் வீண்' என்று; இப்போது எனக்குச் சொல்லாமற் சொல்கிறீர்கள் — 'தஞ்சையில் கலை அழிந்தது' என்ற தணல் நிகர் செய்தியின் மூலம்; எதிர்காலத்தில் நமது பேரரசின் பரப்பளவா மிச்சம் இருக்கப் போகிறது — இருந்தால்தான் என்ன அதைப் பார்த்து எனது வீரத்தை மதிப்பிடலாம் கலை உள்ளம் இல்லாத காட்டுமிராண்டியன் போக்கிற்கு வீரமென்று பெயர் — வெறிக்கூத்தல்லவா என்று எதிர்காலம் கேள்வி கேட்குமே — அதற்கு பதில் சொல்வது யார் — தஞ்சைக் கோயிலில் இருக்கும் என் சிலையா — வேண்டாம். வேண்டாம் — அந்தச் சிலையை அவமானப் படுத்த வேண்டாம் — இப்போதே அதனை உடைத்தெறிந்துவிட உத்தரவிடுகிறேன்' இராசராசனின் ஆவேசமும் சோகமும் கலந்த உரைகளைக் கேட்டு அதிர்ச்சியடைந்து விட்டனர்!

குந்தவையார் கண்களில் நீர் தளும்பிற்று; கண்டராதித்தன் மௌனமாக வேறு பக்கம் திரும்பிக் கொண்டான், பஞ்சவன் மாதேவி தன் கணவன் இராசேந்திரனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்!

இராசேந்திரன் — தந்தையின் ஆத்திரத்தைத் தணிக்கும் எண்ணத்துடன் — தழுதழுத்த குரலில் — அவனது கால்களில் தனது முகத்தைப் புதைத்தவாறு 'தந்தையே — அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்; தாங்கள் ஆணையிட்டு நாங்கள் எதை நிறைவேற்றாமல் விட்டிருக்கிறோம்? நூற்றெட்டு நிலையுள்ள நடனச் சிற்பங்களை அந்தச் சிற்பி இனியனை விட்டே செதுக்கச் செய்கின்ற பொறுப்பை நானே ஏற்றுக் கொள்கிறேன் — தாங்கள் கவலையை விடுக' என்று உறுதியாகக் கூறினான்

இராசராசனும் மகனின் உறுதி கேட்டுச் சிறிது அமைதி பெற்றான்.

(தொடரும்)

எட்டுத் திக்கிலும்..!

-ஜாகீர்-

அங்கீகரிக்கப்பட்ட 'நிர்வாணம்!'

ஒரு நாள் இரவு இத்தாலியக் காவலர்கள் ஒருவனைக் கைது செய்தார்கள். காரணம், அவன் பொது நீர் ஊற்றொன்றில் ஆடை ஏதுமின்றி நிர்வாணமாகக் குளித்துக் கொண்டிருந்தான். 'ஆபாசமாக நடந்துகொண்டான்' எனக் குற்றம் சாட்டி அவன் மீது வழக்குப் போட்டனர் காவலர்கள்.

ஒரு நீண்ட விசாரணைக்குப்பிறகு இரண்டு காரணங்களைக் சாட்டி அவனை விடுதலை செய்துவிட்டார் நீதிபதி அவர் கூறிய காரணங்கள்:

பொது இடங்களில் நிர்வாணமாகத் தோன்றுவது இத்தாலிய சட்டத்திற்கு எதிரானதல்ல.

நிர்வாணத் தோற்றத்தைக் கண்டு இப்போதெல்லாம் யாரும் அதிர்ச்சியடைவதில்லை.

செக்கோஸ்லேவியா நாட்டில் வியட்நாம் இளைஞர்கள்

ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட வியட்நாமிய இளைஞர்களுக்கு இரண்டாவது தாயகமாக செக்கோஸ்லேவேகியா விளங்குகிறது.

பலவகைப்பட்ட தொழில் துறைகளில் பயிற்சிபெறும் அவ்விளைஞர்கள் அங்கேயே தங்கி பணியாற்றவும் செய்கிறார்கள்

அவ்வாறு பயிற்சிக்குவருபவர்கள் முதல் ஆறு மாதங்களை செக்கோஸ்லேவகியா மொழியைப் பயிலுவதற்குச் செலவிடுகிறார்கள்.

உழைப்பிற்கு அஞ்சாத வியட்நாம் இளைஞர்கள் தொழிற் பயிற்சி பெறுவதோடு, செக்கோஸ்லேவேகியாவின் பழமைச்சின்னங்களைப் பார்வையிட்டு அந்நாட்டின் வரலாற்றை அறிந்து கொள்வதிலும் ஆர்வமாக இருக்கிறார்கள்.

அயர்லாந்தில் திருமணச் சிக்கல்கள்!

'வரதட்சணை வாங்குவதும் கொர்டுப்பதும் தவறு' என்று இந்தியாவில் சட்டம் ஏற்பட்ட பிறகு வரதட்சணை 'அன்பளிப்பு' என்ற பெயரில் இன்னும் பெண்கள் வாழ்வில் ஒரு சுமையாக அழுத்திக் கொண்டுதான் இருக்கிறது.

அயர்லாந்திலோ வரதட்சணை வேறு வடிவில் உலவுகிறது. பணியாற்றும் பெண், யாரையாவது மணம் செய்து கொண்டால்—அதன் பிறகு அவளுடைய வருமானம் அனைத்தும் கணவனுக்கே சொந்தம்—அயர்லாந்துச் சட்டப்படி!

இதனால் கணவன், மனைவி கட்ட வேண்டிய வருமான வரி அதிகரிக்கிறது. வருமான வரி அதிகாரிகளின் கண்ணில் மண்ணைத் தூவ சில தம்திகள் தங்கள் திருமணத்தையே பதிவு செய்து கொள்வதில்லை. மாதா கோவிலில் திருமணம் செய்து கொண்டாலும் அலுவலகத்தில் முறைப்படி பதிவு செய்து கொண்ட திருமணங்கள்தான் அயர்லாந்தில் செல்லுபடியாகும்.

அரசியல் கட்சியின் மீதான தடை நீக்கம்!

வங்காள தேசத்தில் தடை செய்யப்பட்ட அரசியல் கட்சிகள் அனைத்தும் மீண்டும் செயல்பட இன்றைய அரசு அனுமதித்துள்ளது.

ஜனநாயகம் தழைத்தோங்க இத்தடை நீக்கம் அவசியம் என்றும், அரசியல் கட்சிகள் பொறுப்போடு நடந்து ஜனநாயகத்தைக் காக்குமென நம்புவதாகவும் அரசு கூறியுள்ளது.

சொன்னபடி ஜியாவுல் செய்வாரா?

காலம் கனிந்து வரும் போது தம் வசமுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஆட்சியாளர்களிடம் ஒப்படைக்கப்போவதாக பாகிஸ்தானின் இன்றைய அதிபரும், இராணுவத் தலைவருமான முகமது ஜியா-வுல்-ஹக் கூறியுள்ளார். 'வாஷிங்டன் போஸ்ட்' என்ற பத்திரிகைக்குப்பேட்டி அளித்தபோது "எனக்கும், என்னுடன் இருக்கும் தோழர்களுக்கும் அரசியலில் தொடர்ந்து நீடித்திருக்க ஆர்வமில்லை" என்றும் கூறியுள்ளார்.

அயூப்கான், யாகியா கான் ஆகியவர்களைப் போல், விரட்டி அடிக்கப்படும் வரை' தாம் பதவியில் இருக்கப் போவதில்லை என்றும் உறுதியாகக் கூறியுள்ளார் ஜியாவுல்.

போரிட்டுக் கொள்ளும் 'சிவப்பு நாடுகள்'

மாபெரும் இரண்டு 'சிவப்பு' நாடுகளான சீனவுக்கும். சோவியத்துக்குமிடையே கருத்து வேறுபாடுகள் முற்றி இன்று அவைகள் போரிட்டுக் கொள்ளும் நிலைக்கு வந்துள்ளன.

சோவியத்தின் படை வீரர்கள் வட கிழக்குச் சீனவுக்குள் நான்கு கிலோ மீட்டர் தூரம் வரை அத்துமீறிப் புகுந்து பல சீனர்களைச் சுட்டுக் காயப்படுத்தியதாகவும், பலரை அடித்துத் துன்புறுத்தியதாகவும் சீன அரசு குற்றம் சாட்டியுள்ளது

சீன தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டதால்தான் அந்த நிகழ்ச்சிஒரு 'ஆயுதப்போராக' வெடிக்காததற்குக் காரணம் என்றும் சீன அரசு குறிப்பிட்டுள்ளது

இது குறித்துச் சீன வெளிவிவகாரத் துணை அமைச்சரான யூ-சான், 'பீகிங்கிலிருக்கும் சோவியத் தூதரான 'டால்ஸ்டிகோவிடம்' பலத்த ஆட்சேபனை தெரிவித்துள்ளார்.

சோவியத்திற்கும் சீனவிற்கும் இடையே எல்லைப் போர் 1964-ஆம் ஆண்டிலேயே துவங்கி விட்டது,

சீனவின் 'உசரி' நதிக் கரையருகே இருக்கும் 'சென்பவோட்டர்' என்ற சிறிய தீவு யாருக்குச் சொந்தம் என்றுதான் இரு நாடுகளுக்கும் இடையே எழுந்த 1969-ஆம் ஆண்டுப் பிரசனை

சோவியத் படை வீரர்களின் அத்துமீறல்கள் சமாதான நடவடிக்கைகளுக்குச் 'சமாதி கட்டத்தான் துணை செய்யும் என்றும் சீன அரசு கூறியுள்ளது.

பாகிஸ்தானில் பத்திரிக்கைச்சுதந்திரம் பறிக்கப்படுகிறது!

பாகிஸ்தானின் இராணுவ அதிபரான ஜியாவுல் இப்போது பத்திரிகைகள்மீது 'படையெடுக்க'த் துவங்கி விட்டார்.

தம்முடைய இராணுவ ஆட்சிக்கு ஆதரவாகக் கருத்துக்களையும் செய்திகளையும் வெளியிடாத பத்திரிகைகளை அவர் 'நசுக்குவதில்' தீவிரமாக இருக்கிறார்.

அறுபதுக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களும் — பத்திரிகை பணியாளர்களும்— அவர் எண்ணப்படி நடந்து கொள்ளாததால் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டுள்ளார்கள்—அவர்கள் வழக்காடுவதற்குக்கூட அனுமதிக்கப் படவில்லை.

பத்திரிகைகளை விரோதித்துக் கொண்ட எந்த ஆட்சியாளருமே நீண்ட நாட்கள் பதவியில் இருந்ததில்லை என்ற சரித்திர உண்மையை பாகிஸ்தான் அதிபர் மறந்தது ஏனோ?

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922

தரம்நாடுவோர்தவறுமல் நாடுவது

தமிழக எண்ணெய்ப் பலகாரம்

தயாரிப்பு விற்பனை நிலையம்

92, திருப்பரங்குன்றம் சாலை, மதுரை 11

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்

உரிமையாளர் பே. தேவசகாயம்

கிளைகள்: 261, மேலமாசி வீதி, 70, சுவாமி சன்னதி 12, அழகர்கோவில் சாலை, 72 C டவுன்ஹால்ரோடு, மதுரை.

"திருநள்ளாற்றுக் கோடை"

—[தஞ்சை அர்ச்சுனன்]—

"ஒருநாள் "இந்து" நாளிதழ் பிரித்தேன்
திருநள் ளாற்றின் திருப்பணி கருதி
அறக்கட் டளையார் விளம்பரப் படுத்திய
சேதியைப் படித்தேன், வேதனை யோடு!
"சனியனின் ஊர்தியைப் பொன்னுற் சமைக்கத்
தனிச்சிறப் புள்ள திட்டமொன் றுண்டு!
நன்கொடை நல்குவீர், பொற்குவை தாரீர்!
மங்கலப் பணிஇது, மனமுவந் தளிப்பீர்!
அளவிலா நன்கொடை யளிப்போர் பெயர்களைச்
சலவைக் கல்லில் பொறித்துக் காட்டுவோம்!"
இப்படிச் சாற்றிய விளம்பரம் படித்ததும்
எப்படித் துடிப்பார், பகுத்தறி வாளர்!
மேனியை மறைக்கக் கந்தலு மின்றி
நாணி யொடுங்குங் குமரியர் உள்ளார்!
வேண்டிய துணிகளை யவர்களுக் கீந்தால்
ஆண்டவன் என்ன, சீற்றமா கொள்வான்?
குப்பையில் எறியும் எச்சிற் சோறும்,
சப்பாத் தோடு நச்சுக் கிழங்கும்
பசிப்பிணி தீர்க்கப் பஞ்சை மாக்கள்
புசிப்பதாய்ப் படிக்கிறோம் செய்தித் தாள்களில்!
கசப்புச் செய்தியால் கலங்குது நெஞ்சம!
துறக்க வாழ்வின் வளமையும் பெருமையும்
உரக்கக் கூறிப் பறைசாற் றிடுவோர்,
இரக்கமும் ஈகைக் குணமும் பெற்றவர்
அறக்கூழ்ச் சாலை யமைத்தா லென்ன?
இந்நற் பணியினைச் சிந்தையிற் கொண்டு
பொருள்திரட் டிடுவோர்க் கருள்தரா திருப்பனோ?
பொங்கித் தின்று பசியா றுவதற்
கெங்கலைந் தாலும் அரிசி பெருது
வங்கக் கடல்போல் குமுறும் வயிற்றுடன்
எங்கோ நடைபா தையிலுறங் கிடுவார்
தங்கக் குடிசைதான் அவர்களுக் கில்லையே!
தங்கக் காக்கைக் கெனநிதி திரட்டுவோர்க்
குரைப்பேன் நானோர் உண்மை!
இறைவனைக் காணலாம் ஏழையின் சிரிப்பிலே!

புருஷன்....

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

குதூகலமாக இருந்தாளோ அதைவிடக் குதூகலமாக அவள் நேற்று இரவைக் கழித்திருக்கிறாள் இழந்ததைப் பெற்றுவிட்ட இன்பப் பெருக்கு— வெற்றிப்பெருக்கு அவளுக்கு! அதே பெண்; அதே மாப்பிள்ளை! ஆனால், இரண்டாவது கல்யாணம்; இரண்டாவது முதலிரவு! தமிழ்நாட்டுப் பெண்களுக்கு ஒரே ஒரு முதலிரவுதான் இருக்க முடியும்! ஆனால், குருவம்மாவுக்கு மட்டும் இரண்டு முதலிரவுகள்! கணவன வருவானென்று அவளுக்கு மட்டும் நேற்று முன் கூட்டியே தெரிந்திருந்தால் மல்லிகையும், முல்லையும தலை மகிழச் சூடிக்கொண்டிருக்க மாட்டாளா? அதனால்தான் இன்று எதுவும் குறைவில்லாமல் சேகரித்து வைத்திருக்கிறளோ? முடியில் முல்லைச் சரம் சன்னல் மாடத்தில் ஜவ்வாதுப் பத்தி உரியில் பாலும் பழமும்! பாவம்! அணையை உடைக்கப் போகும் புதுவெள்ளம் போல் அவள் மனம் நிறைந்து கசிந்துகொண்டிருந்தது. பாதுகாபபில்லாத இளமை இற்றுப்போன பட்டுத் துணியைப் போன்றது. அடிக்கடி கவனித்துக்கொள்ள வேண்டும். அது எப்போது கிழியும் என்று சொல்ல முடியாது.

அன்று இரவு காளி கோயில் பூசை அறையைப் போல் வீடு முழுவதும் பூவாடையும் பத்திவாடையும் நீக்கமற நிறைந்து மணம் பரப்பின.

"குருவம்மா!"

"ம்......ம்......!"

"மணி என்ன இருக்கும்"

"கோழி கூவிடுச்சே!"

"சரி நான் போகட்டுமா? மானாமதுரைக்கு போற சட்டில் போயிடப் போகுது!

"ஏனும்! இருந்து அப்பாவைப் பார்க்கவேணுமா?"

"அதுக்குனு முறை இருக்கு குருவம்மா! வேட்டி, பழம் எல்லாம் வாங்கிட்டு நாளைக்கி வாரேன்" தின்னையிரம் நயந்து சொன்னான்.

"அத்தான். இந்தமாதிரி ராத்திரி வேளையிலே வந்துகிட்டே இருந்தா யாரும் எதுவும் நம்மை தப்பாச் சொல்லமாட்டாங்களா?"

"புருஷன் பெண்ஜாதி எப்படி இருந்தா என்ன? பேசட்டுமே!"

"அதுக்குச் சொல்லலியே! வர்ரது நீங்கதான்னு எப்படி அவங்க தெரிஞ்சுக்குவாங்க! அதாலேதான் சொன்னேன்." குருவம்மா கெஞ்சினாள்.

"ஹோ! அதுக்குச் சொல்றியா? எல்லாம் இந்த மாசத்திற்குள்ளேயே சரியாயிடும்" என்று சொல்லிவிட்டு தின்னையிரம் விடைபெற்றுக் கொண்டான்.

குருவம்மா வாசலில் நின்று அவன் தலை மறையும்வரை பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று அவளுக்கொரு பயம் வந்தது. இப்போது யாரும் வீட்டுக்குள் வந்து பூவையும், பழக்கூடையையும், புதுப் புடவையையும் பார்த்து விட்டால் என்னுவது என்று அவள் துணுக்குற்று உள்ளே ஓடினாள். ஆனால், அவளுக்குப் பின்னுடியே தயிர்க்காரி நுழைந்ததைக் குருவம்மா கவனித்தாளா?

(தொடரும்)

மாவட்ட தி. மு. க. நிர்வாகிகள்

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாவட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள் பட்டியல் வருமாறு :—

சென்னை மாவட்டம்

அவைத் தலைவர் : பி. பொன்னுரங்கம் எம் எல். ஏ,

செயலாளர் : ஆர். டி சீதாபதி

துணைச் செயலாளர் : கி. வள்ளுவன் (வட சென்னை)

துணைச் செயலாளர் : அ ஜார்ஜ் (தென் சென்னை)

பொருளாளர் : ஓ. எஸ் பாலசுந்தரம்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் :
ஏ. வி. பி. ஆசைத் தம்பி எம், பி. மு. க. ஸ்டாலின், ஞா. எழிலன், சா. கணேசன்

பொதுக் குழு உறுப்பினர்கள் :
எஸ். கண்ணப்பன், என். வி. என். செல்வம். சுப்பையா, ஏ. மாணிக்கம், கோவிந்தராசன், து கணபதி, டி குப்புராஜ் கோ. மோகன், ப. ஆசைமுத்து. சு. பாலன் எம். எல், ஏ, நீ. மணிமாறன், சி. ஆர். ராமச்சந்திரன், பி. கே. மூர்த்தி மு. க. வரதன்.

செங்கற்பட்டு மாவட்டம்

அவைத்தலைவர்: டி இராசரத்தினம்
செயலாளர் : சி ஆறுமுகம் எம் எல் ஏ.
துணைச் செயலாளர்கள் : தி. இரா. மாசிலாமணி (வடக்கு)
வி. பி. அகிலன் (தெற்கு)

பொருளாளர் : எஸ் ஐ வெங்கட்ராமன்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்:
சி. வி. எம், அண்ணாமலை, செ. கோ. விசுவநாதன், கே எம். இராசகோபால். மா.வெ. நாராயணசாமி.

பொதுக்குழு உறுப்பினர்கள்:
ஆலந்தூர் ஆர்.எஸ். பாரதி. பி.ஏ.பி.எல், எம்.வி. இராமு பி. காம், ந. சரோஜா இரா. ஏழுமலை, எல். சிராமுலு ஆ. கிருஷ்ணன் பி. ஏ. கா. ப. கணபதி மா. தா. சானகிராமன் ஏ.ஆர். அன்சர் தா.வி. அன்புக்கண்ணன்.

கோவை மாவட்டம்

அவைத்தலைவர்: பி. எஸ். ஜானகிராம்

செயலாளர் : மு. கண்ணப்பன்

துணைச் செயலாளர் : ஆர். டி. மாரியப்பன் (மேற்கு)
ந. பழனிச்சாமி (கிழக்கு)

பொருளாளர் : சி. டி தண்டபாணி

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்:
மு. இரசமநாதன், இரா. மாணிக்கவாசகம், மு. பழனிச்சாமி சு. துரைசாமி

பொதுக்குழு உறுப்பினர்கள்.
வெ. சௌந்தரராசன். அ. கணேசமூர்த்தி, சி. பாலுசாமி, எஸ் கே. வேடப்பன், மா. பழனிச்சாமி, ஆர். பி. இராமசாமி, கா. இரா. அரங்கநாதன், தே. அ. பழனிச்சாமி வி வி. இராமசாமி. சு திருமலைசாமி.

மேற்கு இராமநாதபுரம் மாவட்டம்

அவைத்தலைவர்: கே. பி. எஸ். பாண்டியன்

செயலாளர் : வெ. தங்கபாண்டியன் எம். எல். சி.

துணைச் செயலாளர் : எஸ் ஏ ரசாக்

பொருளாளர் : சொ. சன்னுசி

தலைமைச் செயற்குழு உறுப்பினர்:
அ. சீனிவாசன்

பொதுக்குழு உறுப்பினர்கள்:
சொக்கு என்ற கருப்பையா, தாடி க. அபுதாலிப், எம். எம். சாமி, க. கந்தசாமி, மு. பாலகிருட்டிணன்.

தென் ஆற்காடு மாவட்டம்

அவைத்தலைவர்: கோ. மாரியப்பன்

செயலாளர்: செஞ்சி நா. ராமச்சந்திரன் எம். எல். ஏ.

துணைச் செயலாளர்கள்: இ. கிருஷ்ணசாமி (வடக்கு)
சு இலட்சுமணன் (தெற்கு)

பொருளாளர் : துரை சலியமூர்த்தி எம் எல். ஏ

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்:
பொன் இராமகிருஷ்ணன், ஆ செ. குமாரசாமி எஸ் பி பச்சையப்பன், வி. சுப்பிரமணியன்

பொதுக்குழு உறுப்பினர்கள்:
சீத்தாராமன், கு. பா. பழனியப்பன், சி. குப்புசாமி, பாபு ஆர். கோவிந்தராசன். செ. வி கீர்த்தி ஆர். ஆர். முனுசாமி, கே ஆர். செயராமன், புலவர் பொன்னம்பலம்; பி. வி. இலட்சுமணன், அரங்க அருள்

புதுக்கோட்டை மாவட்டம்

அவைத்தலைவர்: துரைமாணிக்கம்
செயலாளர் : அ பெரியண்ணன்
துணைச் செயலாளர்கள். கீரை ஆ தமிழ்ச் செல்வன் (மேற்கு)
சி இரத்தினசபாபதி (கிழக்கு)
பொருளாளர் : க. சிதம்பரம்
தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள்:
இரா. இராசன் சிங்கமுத்து
பொதுக்குழு உறுப்பினர்கள்:
சி. ர. ராமமூர்த்தி, சு. ரெங்கராசு வெ. ராமையா, த. நல்லதம்பி, க. வேலுச்சாமி

தஞ்சை மாவட்டம்

அவைத் தலைவர் : முத்துப்பேட்டை ந. தருமலிங்கம்,

செயலாளர் : தாழை மு. கருணாநிதி. எம். எல். ஏ.

துணைச் செயலாளர்கள் - பேராவூரணி
(மேற்கு) மு. கிருஷ்ணமூர்த்தி.
சீர்காழி கோ.
(கிழக்கு) மோகனதாசன்.

பொருளாளர் - மன்னை கு. பாலகிருஷ்ணன்,
தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் .
எல் கணேசன், பி. ஏ. பி. எல்., எஸ். கணேசன், எல். எல். ஏ;. கோ. இளங்கோவன் எம். எல். ஏ , எஸ் நடராசன் எம். எல். ஏ ; கோ. சி. மணி எம் எல். சி., மா. மீனாட்சி சுந்தரம்: எம். எல். ஏ.,

பொதுக் குழு உறுப்பினர்கள் :
தஞ்சை டி. கே! கோவிந்தன், சிக்கல் அ அம்பலவாணன், கொல்லுமாங்குடி வரத கோபாலகிருஷ்ணன்; தஞ்சை என். ஏ. பழனியப்பன்; ஏ. பால தண்டாயுதபாணி, ஒ. ஏ, டி கே. பாலு! குடந்தை க; பத்மநாபன், தம்பி ஏ. தேவேந்திரன். தஞ்சை கு. சுல்தான் திருவாரூர் முருகுபாண்டியன், பெ. சம்பந்தமூர்த்தி, புலவர் த; தோழப்பன் தஞ்சை சி. சாமிநாதன்:

கிழக்கு ராமநாதபுரம் மாவட்டம்

அவைத் தலைவர் : கா' காத்தமுத்து
செயலாளர் : தா. கிருட்டினன் எம். ஏ.,
துணைச் செயலாளர் : மு. க. எழில் மன்னன்
பொருளாளர் : ஆர். எம். அலியார்

தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ;
எம். எஸ். கே. சத்தியேந்திரன், சுப. தங்கவேலன், சித சிதம்பரம், முன்னாள் எம். எல். ஏ.)

பொதுக் குழு உறுப்பினர்கள் :
எஸ். எஸ்: தென்னரசு, திருமதி தமிழரசி, அகமது தம்பி, சேக்சுல்தான், செதுராமன் அ. சண்முகம்; த. வேலுசாமி எம். ஏ

நெல்லை மாவட்டம்

செயலாளர் : இரா. கிருட்டிணன்
துணைச் செயலாளர் : எம். மஸ்தான், (மேற்கு)

பொருளாளர் : டி. ஏ. கே இலக்குமணன்
தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் :
கா. மு. கதிரவன், கே. பி. கந்தசாமி, வை. கோபால்சாமி எம். பி., பி! தம்பித்துரை.
பொதுக் குழு உறுப்பினர்கள் :
ஆ. கருப்பையா; முன்னாள் எம். எல். ஏ. சோம. திருநாவுக்கரசு, வீ. கார்த்திசன்; முன்னாள் எம். எல். ஏ.. ப. புகழேந்தி, மு. பெரியசாமி, பா. இராமசாமி ஏ. எஸ். பாண்டியன பி. சண்முகம், மு. சுப்புரத்தினம், பி. ஏ. பி. எல். பி. கே. சாமி எஸ் ஆர். பெருமாள் கா. காவேரியார்.

(மற்றவை அடுத்த இதழில்)

நம்பிக்கை நட்சத்திரமாக தி. மு. க.

கழகத்தலைவர் கலைஞரின் பிறந்தநாள் செய்தி!

கழகத்தலைவர் கலைஞர் அவர்கள் தமது 55ஆம் ஆண்டு பிறந்த நாளன்று, விடுத்த செய்தி வருமாறு :—

“எத்தனையோ இடுக்கண்களுக்கும் இடையில் தி. மு. கழகத்தை வலிவு குன்றாத நிலையில் வளர்த்து வருகிற கழகக் கண்மணிகளுக்கு என்னுடைய பாராட்டுக்களை இந்த நாளில் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகமெங்கும் உள்ள தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக தி. மு. கழகம் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

இந்த மகிழ்ச்சிகரமான நாளிலேகூட இலங்கையில் தமிழர்கள் மீண்டும் அவதிக்கு ஆளாகிற சூழ்நிலை அரும்பி இருப்பதைக் கண்டு மிகுந்த கவலை கொள்கிறேன். அவர்களுடைய இன்னல் நீங்குவதற்கு விரைவில் வழி ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறேன்.

இந்தியாவைப் பொறுத்தவரை சமதர்ம சமுதாயமும் - பகுத்தறிவுப் பேரொளியும் பரவிட வேண்டும் எனும் பொதுவான அவாவினை நான் தெரிவிக்கிற நேரத்தில் அரசியல் ரீதியாக மத்தியில் கூட்டாட்சியும்—மாநிலங்களில் சுயாட்சியும் அமைய தி. மு. கழகம் தீவிரப் பணிகளில் இறங்குவதற்காகத் திட்டங்களைத் தீட்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழர் நலன் காக்கவும்—தமிழ்மொழி காக்கவும்—மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பு காக்கவும் - தி. மு. கழகம் என்றென்றும் அறப்போர்க் களத்தில் நிற்கிற சிப்பாயாகவே திகழும் என்ற உறுதியினையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பிறந்த நாளில் எனக்கு வாழ்த்தளித்து என் பணியில் என்னை உற்சாகப்படுத்துகிற தமிழர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத் தொண்டர்களைப் பொறுத்த வரையில் எதிர்ப்பு மழைபொழியும் பொழுது அவர்களுக்கு நான் குடையாகவும் — அடக்குமுறை வெப்பம் தகிக்கும்போது அவர்கள் பயணம் தடைபடாது இருக்க அவர்களின் கால் செருப்பாகவும் நான் என்றென்றும் இருப்பேன் என்பதையும் கூறிக்கொண்டு, பெரியார்—அண்ணா—ராஜாஜி—காமராஜ் — காயிதே மில்லத் போன்றவர்கள் வாழ்ந்து தமிழ்நாட்டுக்குக் காட்டிய வழியினில் தொடர்ந்து தொண்டாற்றுவேன்”

கலைஞரின் சிறுகதைகள் - ஒரு பார்வை

உலகப் புகழ்பெற்ற நாவல் ஆசிரியையான பெர்ல்பக் பண்டித நேருவைப் பற்றிக் குறிப்பிட்டபோது, "நேரு முழு நேர அரசியல் வாதியானது இலக்கிய உலகிற்கு ஏற்பட்ட இழப்பு" என்றார். இக் கூற்று கலைஞருக்கும் முற்றிலும் பொருந்தும்.

பள்ளியில் படித்த அந்த இளமைக் கால நாட்களிலேயே தம்முடைய எழுத்தால் பெரியாரையும், அறிஞர் அண்ணாவையும் கவர்ந்தவர் கலைஞர்; அரசியலில் ஈடுபட்ட பிறகு எத்தனையோ பேர்களின் இலக்கியத் திறன் 'மொட்டிலேயே கருகிப் போனதைக்கண்டிருக்கிறோம்.

கலைஞர் ஒரு விதிவிலக்காக நின்று அரசியல் துறையைப் போலவே இலக்கியத் துறையிலும் தமது தனித் தன்மையை வெளிக் காட்டிப் புகழ்பெற்றவர் என்பதை அவரோடு முரண்பாடான கருத்துக் கொண்டோரும் ஒப்புக் கொள்வர்.

என்ற போதும்—

அவர் முழு நேர அரசியல் வாதியானது தமிழ் இலக்கிய உலகிற்கு ஏற்பட்ட ஒரு இழப்பே! அவர் ஒரு அரசியல் வாதியாக ஆகாமல் இருந்திருந்தால்; 'கெட்டித்துப் போன பழைய சமுதாயமெனும் முகத்தின் மீது ஓங்கித் தாக்குவது போன்ற' இன்னும் எத்தனையோ நாடகங்கள், நாவல்கள் சிறுகதைகள் நமக்குக் கிடைத்திருக்குமல்லவா?

'கலை கலைக்காகவே' என்ற வறட்டுக் கூக்குரலிட்டு—வெறும் கற்பனை மயமான பாத்திரங்களைப் பிறப்பித்துவிட்டு—நடப்பு வாழ்க்கையில் காணக் கிடக்கும் பொருளாதார ஏற்ற தாழ்வுகள், அதன் விளைவான வறுமை, களவு, விபச்சாரம் போன்ற சமுதாயத் தீமைகளை—சீழ்வடியும் புண்களை நறுமண எண்ணெய் தடவி மறைக்கப் பார்ப்பது போல்—உண்டு கொழுத்தோரைக் 'குஷி' படுத்த ஒரு சிலர் 'நகாசு' இலக்கியங்களை எழுதிக் குவித்துக் கொண்டிருந்த காலத்தில்—

பணக்கார வர்க்கத்தின் தனிச் சொத்துடைமையாக இருந்த, அந்த வர்க்கத்தைத் துதிபாடிக்கொண்டிருந்தவர்களின் பிடியில் இருந்த இலக்கியத்தை மீட்டு—'கலை மக்களுக்காகவே...' என்ற புதுக்குரலெழுப்பினார்கள், முற்போக்குச் சிந்தனை கொண்ட ஒரு இளைஞர் கூட்டத்தினர்; அவர்களில் முன் வரிசையில் நின்றவர் கலைஞர்.

நாடகங்கள்—சிறு கதைகள்—நாவல்கள்—கவிதைகள் போன்ற இலக்கியத்தின் அனைத்துப் பிரிவுகளிலுமே தமக்கென்று ஒரு நோக்கையும், பாணியையும் கையாள்பவர் கலைஞர்.

அவர் படைப்புகள் அனைத்தையும் விரிவாக ஆராய்ந்து, கண்டறிந்தவைகளை வெளியிட வேண்டுமானால் அதிகப் பக்கங்களுடன் கூடிய ஒரு புத்தகமே எழுத வேண்டி இருக்கும்.

ஆகவே சிறுகதைத் துறையில் அவருடைய சமுதாய நோக்கு—அதை வெளிக்காட்டும் திறன்—நடை—பாத்திர அமைப்பு—தொடுக்கும் விதம்—முடிக்கும் அழகு ஆகியவைகளுக்கு எடுத்துக்காட்டாக இரண்டு சிறு கதைகளை இச் சிறிய கட்டுரையில் காண்போம்.

நளாயினி :

பழைய புராணங்கள் கூறும் கதைகள்மீது—புதிய பார்வை செலுத்தி:-அவைகள் புகட்டும் 'நீதி' எப்படி 'அநீதி' ஆகும் எனச் சாடித் துணிந்து சிறுகதைகள் எழுதியவர்கள் சிலரே. எடுத்துக்காட்டாக—

'அகலிகை' என்ற பெயரில்தாம் எழுதிய சிறுகதையில் ஒரு புதிய போதனை அளிக்கிறார் புதுமைப்பித்தன்.

இந்திரன், அகலிகையின்—அதாவது கணவரான கௌதமரின் உரு வெடுத்து அவளுடைய கற்பைச் சூறையாடிவிடுகிறான்; கோபமுற்ற 'தபசி' கௌதமர் மனைவி அகலிகையைச் சாபமிட்டுக் கல்லாக்கிவிடுகிறார். இது புராணம் கூறும் கதை!

புதுமைப்பித்தனின் 'அகலிகை'யில் வரும் கௌதமரோ, இந்திரனைப் பார்த்து, "ஏனப்பா, உலகத்திலுள்ள பிற பெண்களை உன் சகோதரிகளாகக் கருதக்கூடாதா?" என உபதேசம் செய்கிறார்; பிறகு, அகலிகையை நோக்கி, "உணர்ச்சி தேவனையும் மிருகமாக்குகிறது. சந்தர்ப்பவசத்தால் உடல் களங்கமானால்—பாவம், அபலை என்ன செய்வாள்?" எனக்கூறி அவளை மன்னித்துவிடுகிறார்—கல்லாக்கவில்லை!

இவ்வாறு—'பழைய புராணக் கதைகள்மீது புதிய பார்வை' செலுத்தும் துணிச்சலான முயற்சியில் ஈடுபட்டு வெற்றி கண்டவர்களில் கலைஞரும் ஒருவர்.

குட்டரோகம் பிடித்த கணவனைத் தலையில் சுமந்து—அவனுடைய காம இச்சையைத் தீர்க்க—அவனைத் தாசி வீட்டிற்கு எடுத்துச் செல்லும் நளாயினியைக் கற்பிற் சிறந்த 'மாதரசி' என்றும், 'கல்லானாலும் கணவன்—புல்லானாலும் புருஷன்' என்ற 'தர்மப்படி' நடந்த மங்கை நல்லாள் என்றும் போற்றிப் புகழ்கிறது புராணம்.

கலைஞரோ—நளாயினி, புத்திசாலித்தனம் நிரம்பப் பெற்ற காரியக்காரி என்ற புதிய 'உண்மையைப்' படம் பிடித்துக் காட்டுகிறார்.

இதோ, கதையில் நளாயினிக்கும் அவள் தோழி இதயாவுக்கும் இடையே நடக்கும் உரையாடலின் ஒரு பகுதி—

"இதயா! உண்மையாகச் சொல்! நான் பத்தினியா? எப்படி? எப்படி?"

"ஆமாம்! குஷ்டரோகம் பிடித்த கணவனைத் தாசி வீட்டுக்கு அனுப்பியிருக்கிறாயே!"

"கிண்டல் செய்யாதே—இதயா! குஷ்டரோகம் பிடித்தவனோடு கூடிக் கிடக்க எனக்கு விருப்பமில்லை. அவனோ என்னை ஆசையோடு அழைக்கிறான். அணைக்கவோ என் கை நடுங்குகிறது. ஆகவேதான் அவனைத் தாசி வீட்டுக்கு அனுப்பினேன். என் அழகுக்கு ஆபத்து வராமல் அவன் ஆவல் தீர்ந்தால் சரியென்று எண்ணினேன். இந்தத் தந்திரம் உனக்குத் தெரியா, இதயா!"

"கணவனைக் 'கூடையில் வைத்துத் தூக்கிக் கொண்டு' போனதற்கும் கலைஞரின் நளாயினி காரணம் சொல்கிறாள்:

"குஷ்டரோகியைக் கையால் தொட்டுத் தலையில் தூக்கிப் போக எனக்கென்ன பைத்தியமா?"

சித்தார்த்தன்

புராணங்கள் கூறும் கதைகளில் மண்டிக் கிடக்கும் மடமையைப் 'பளிச்'சென்று வெளிச்சம் அடித்துக் காட்டுகிறது நளாயினி சிறுகதை; அதுமட்டுமல்ல; 'ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி' என்ற அந்தக் காலக் கொடுமையையும், வெறும் பள்ளியறைப் பதுமைகளாய்ப் பெண்களைக் கருதி வாழ்ந்த 'ஸ்திரிலோலர்களான' ஆண்களின் பொறுப்பற்ற வாழ்க்கையையும் சித்திரிக்கிறது.

"பத்தினிப் பட்டம் போதுமா பருவக்களை சொட்டும் இந்தப் பரிதாபத்திற்குரியவளுக்கு?"

—அடிமைகளைப் போல் நடத்தப்படும் பெண்குலத்தின் மொத்த ஏக்கமே நளாயினியின் இந்தக் கேள்வியில் பீறிட்டுக் கிளம்பவில்லையா?

"அழகான பெண். ஒளி முகம் படைத்த உருக்குலையா மங்கை. வெள்ளை உடையில் அவள் அன்ன நடைக்கு அழகு சேர்க்கிறாள். சிவந்த கழுத்திலே ஒரு கறுப்புமணி மாலை. அள்ளிக் கோதி முடித்த கூந்தலையுடைய கோதை—தலையிலே ஒரு கூடையுடன் தெருவிலே போகிறாள். அப் பழுக்கற்ற யௌவனத்தின் தனித் தன்மை வாய்ந்த அழகு ஊர்வலம்! இருள் படிந்த தெருவிலே அவள் நடந்து செல்வது வையத்து மண்ணுக்கு வரவழைத்த வானத்துத் தாரகைதான்! வந்துற்றதோ என எண்ணத் தோன்றியது!"

—வேலைப்போல் விரைந்து வந்து தாக்கும் சொற்களைப் பாய்ச்ச மட்டுமல்ல, மெல்லென இசைபாடிச் செல்லும் தெள்ளிய, அமைதியான நீரோடை நடையிலும் எழுதிச் செல்லத்தம்மால் இயலும் என்பதைக் கலைஞர் எவ்வளவு அழகாகக் காட்டுகிறார்.

சீதை; திரௌபதை, தமயந்தி போன்ற கற்பரசிகளை (!) படம் பிடித்துக் காட்ட வேண்டி இருந்தாலும், நம்முடைய அந்தக் காலப் புலவர்களுக்கு அம்மங்கையரின் 'மேல் அழகையும்...கீழ் அழகையும்' இன்னபிற 'சாமுத்ரிகா இலட்சணங்களையும் விரிவாக வர்ணிக்கா விட்டால் தூக்கம் வராது'

கலைஞரோ, நளாயினியை அவ்வாறெல்லாம் துகிலுரித்துக் காட்டாமல் கண்ணியமாகச் சித்திரிக்கிறார்!

அய்யோ ராஜா !:

புராண நாயகிகள், மகாராணிகள், இளவரசிகள், மேட்டுக்குடியில்பிறந்தஎழிலரசிகள் குடும்பப் பாங்கான பெண்கள் 'புனிதமான' அவர் தம் 'காதல்கள்—மட்டுமே இலக்கியத்தில் இடம் பெற்றிருந்த காலம் ஒன்று இருந்தது.

பிச்சைக்காரிகள், வீட்டு வேலைக்காரிகள், கூலிக்காரிகள், பிறரால் வெறுத்தொதுக்கப்பட்ட விபச்சாரிகள்—போன்றோரும் கதையின் நாயகிகளாகப் பிற்காலத்தில் இடம் பெற்றார்கள்.

ஒவ்வொருவருக்கும் ஒரு முகம் இருப்பதுபோல் ஒவ்வொருவருக்கும் ஒரு கதை இருக்கிறதல்லவா? ஒவ்வொருவருக்கும் ஒரு இதயம் இருப்பதுபோல், அந்த இதயத்தில் அவரவர்க்கென்று சில உணர்வுகள் உண்டல்லவா?

முப்பதே வயதான விதவை முத்தம்மாவுக்குக் களையான முகம்; கட்டான தேகம்—ஆனால் அவளுடைய கதையோ—துயரமானது...மிகத் துயரமானது...

கணவனை இழந்த அவளுக்கு வாழ்க்கையின் ஒரே பிடிப்பு—நம்பிக்கை—எதிர் காலக் கனவு-எல்லாமே அவளுடைய குழந்தை ராஜாதான்...

புதுமைப்பித்தனின் மொழியில் சொல்வதானால், 'கண்ணைப் பிடுங்கிய தெய்வம் கோலைக் கொடுத்தது போல' அனாதரவான அவளுக்கு இருக்கின்ற ஒரேதுணை—சொந்தபந்தம்—அனைத்துமே ராஜா தான்...

வாழ்க்கைப் போராட்டத்தில் குழந்தை ராஜாவை ஒரு மனிதனாக்க அவள் ஏற்றிருக்கும் பாத்திரம்—விபச்சாரி! அதனால் என்னவாம்?...

ஏற்றதாழ்வுள்ள இச்சமுதாய அமைப்பை ஒத்துக் கொண்டு—அதை மாற்றப் போவதாக எழுத்திலும், பேச்சிலும் மட்டுமே 'பாவனை' செய்து கொண்டிருக்கும் நம்மில் யாருக்கேனும் 'பாவம் செய்கிறவள்...' என முத்தம்மாவைக் குற்றம்சாட்டி அவள் மீது 'முதல் கல்லை வீச உரிமை இருக்கிறதா?

குழந்தை ராஜாவுக்குக் காய்ச்சல் கண்டுவிடுகிறது... அவனை மடியில் கிடத்தியபடி நெஞ்சம் பதற, ரிக்ஷாவில் ஏறி அமர்கிறாள் முத்தம்மா... ரிக்ஷாக்காரன் வேகமாக ஓட்டுகிறான்...

வழியில் ஒரு தடை—

நேபாள மன்னர் வருகிறார் என்று 'கேட்'டை அடைத்து விடுகிறார்கள் ......எல்லோரையும் அரைமணி நேரத்திற்கு மேலாகக் காக்க வைத்த பிறகு 'கேட்' திறக்கப்படுகிறது...

மீண்டும் ரிக்ஷா டாக்டர் வீடு நோக்கி விரைகிறது—என்ன பயன்?

குழந்தை ராஜா மாண்டு விடுகிறான்!

ராஜாவை அரை மணி நேரத்திற்கு முன்பாகக் கொண்டு வந்திருந்தால் பிழைக்க வைத்திருக்கலாம் என்று டாக்டர் கூறுகிறார்.

'அனைத்து உயிர்களிலும் அந்த ஈசனே நீக்கமற நிறைந்துள்ளான்...' என்ற 'கதா காலட்சேபம்' நாள்தோறும் நடைபெறும் இந்தியாவில் மட்டுமே இம்மாதிரியான சாவுகளைச் சந்திக்கலாம்!

கலைஞரின் 'அய்யோ ராஜா' சிறுகதையில் ஒரு உலகத்தையே காணலாம்......வாழ்வின் அடித்தளத்தில் உழலும் மக்கள் நிறைந்த இருண்ட உலகம்!

—மன்னர்கள் ஒழிந்த பின்னும் அந்த 'அமைப்பு' அப்படியே உடைபடாமல்இருப்பதை 'அய்யோ ராஜா' சிறுகதை தெளிவாகக் காட்டுகிறது. ஜனநாயக நாடென்று என்னதான் நம்மை நாமே பாராட்டிக் கொண்டாலும் பழைய 'பந்தாக்களும்' மிச்சம் மீதியிருக்கும் 'இராஜதர்பார்களும்' இந்தியாவில் இன்னும் உலா வந்து கொண்டுதானே இருக்கின்றன......

—"ஈ தொட்ட பலகாரத்திற்குக் கற்பு இல்லை; அதனால் கெடவில்லை; சுவை மட்டும் கெட்டது! முத்தம்மாவுக்கோ வாழ்க்கையிலே சுவையும் கெட்டது—கற்பும் கெட்டது! குப்பை மேட்டிலே ஈ மொய்த்தால் என்ன? நாய்தான் படுத்தால் என்ன......? இப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள் அந்தத் தமிழ் நாட்டு மங்கையர் திலகம்...'

—"அடிபட்டுக் காய்ச்சலில் கிடக்கும் கணவனுக்குக் கஞ்சி ஊற்ற எட்டணாக் காசுக்குக் கற்பை விற்கும்—தவறு, அடகு வைக்கும் புதுமைப்பித்தனின் 'பொன்னம்மா' வர்க்கத்தைச் சேர்ந்தவர்தான் முத்தம்மாவும்.

வாழ்க்கையில் விடை காணாதிருக்கும் பல பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டி—பல தரப்பட்ட ஆண் பெண்களின் குறை நிறைகளைச் சித்தரித்து—பொருளாதார ஏற்றதாழ்வின் காரணமாக ஏற்படும் விளைவுகளைப் படம் பிடித்துக் காட்டும் கலைஞரின் சிறுகதைகளில் மார்க்சீய சிந்தனை மேலோங்கி இருப்பதை மறுப்பதற்கில்லை.

உண்மை ஜனநாயகம் உருவெடுக்குமா?

(எஸ். பி. சற்குணம் பி. ஏ.)

மக்களால் மக்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களே ஜனநாயகத்தில் அரசாட்சி நடத்த வேண்டும் என்று ஜனநாயகம் என்பதன் பொருளைச் சிறந்த முறையில் விளக்க வந்த அமெரிக்க ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் கூறினான். உலகில் இன்றுள்ள அரசியல் அமைப்புகளிலே ஜனநாயக அமைப்புதான் குறைபாடுகள் குறைந்ததாகவும் நிறைவுகள் அதிகம் காணப்படுவதாகவும் உள்ளது ஆனால், இந்திய ஜனநாயகமோ ஒரு வேடிக்கையான ஜனநாயகமாகக் காட்சியளித்துக் கொண்டிருக்கிறது.

மனிதனை அரசியல் ரீதியாக விடுதலை செய்த ஜனநாயகம் பெரும்பான்மையினர் கொடுமையினாலும், அவர்களின் ஒன்றுபட்ட கருத்தின் சக்தியாலும் அதே மனிதனை அடிமைப்படுத்தும் நிலைமை வளர்ந்து விட்டது.

ஜனநாயகம் என்பது விடுதலை உணர்வு குடியிருக்க மனிதன் கட்டிய மாளிகை ஆனால், அந்த வீட்டையே இடித்துத் தள்ளுகின்ற எண்ணம் கொண்டவர்கள் அதிலே குடிபெற்றப்பட்டனர் ஜனநாயகம் புதைகுழி நோக்கிப் போய்க் கொண்டிருந்தது.

ஜனநாயகம் நாம் தேடி அடைய வேண்டிய தூரத்து முடிவிடமே தவிர, நாம் ஒய்வு பெறும் ஒதுக்கிடம் அல்ல. விடுதலை — ஒரு முடிவான சாதனை அல்ல; முடிவு பெறாத முயற்சியே ஆகும் என்று பிலிட்ஸ் ப்ராங்க் பர்ட்டர் அருமையாக கூறினான்.

இன்றைக்கு எழுத்துசட்கும், பேச்சுகட்கும், எண்ணங்கட்கும் உரிமை அளித்திருப்பது அந்த ஜனநாயக அமைப்பே. இதில்தான் அடிப்படை உரிமைகள் அனைத்தும் வழங்கபபட்டுள்ளன. அதனால்தான் அரசியல் சட்டத்திலேயே உறுதிப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது பெரும்பான்மையினர் சேர்ந்து ஒப்புகொண்டதாலே அது சட்டமாக்கப்பட்டது. பெரும்பான்மையினரால் ஒப்புக் கொள்ளப்பட்டது என்பதற்காக ஒரு காரியம் சட்டமாகி விடக்கூடாது. அங்கே அது நியாயத்தின் பால்பட்டதா? அறிஞர்களால் ஒத்துக்கொள்ளப்படுமா என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்

சாக்ரட்டீஸ் கையில் விஷக் கோப்பை கொடுக்கப்பட்டது. அது பெரும்பான்மையினரின் முடிவுதான். ஆனால் அது நேர்மையாகாது; நீதியாகி விடாது சிறுபான்மையினரின் கருத்து என்பதாலேயே அது நீதி தவறிய ஒன்றாக ஆகி விடாது.

“மக்கள் தங்கள் ஜனநாயகக் கருத்துக்களை வெளியிட பூரணமான உரிமையும் வசதிகளும் வேண்டும் பெரும்பாலான மக்களின் நல்லெண்ணம் இல்லாமலோ அவர்களுடைய அந்தரங்கமான சம்மதம் இல்லாமலோ எத்தகைய சோசலிச மாறுதலும் செய்யமுடியாது’ என்றவர் நேரு பண்டிதர்.

“திரு சாஸ்திரியார் காலமானதற்குப் பிறகு அரசியலே மாறிவிட்டது இன்றுள்ள அரசியல் நாம் ஆரம்பத்தில் வகுத்த பாதைக்கு நேர் விரோதமானது. இப்போதுள்ள ஜனநாயகத்திற்கும், நாம் சுயராஜ்யம் பெற்ற காலத்தில் இருந்த ஜனநாயகத்திற்கும் வித்தியாசம் உண்டு ஜனநாயகம் பிழைக்கட்டும்” என்றார் பண்டிதர் நேருவின் சகோதரியார் விஜயலட்சுமி பண்டிட் தனது மருகளின் ஆட்சியை விமர்சிக்கும்போது

ஜனநாயகம் பிழைத்திட வழிவகைகள் தேட வேண்டிய காலம் நம்மை நெருங்கி வந்தது. தடியெடுத்தவன் எல்லாம் தர்பார் நடத்துகின்ற காரியத்தை முடிக்க வேண்டிய காலமும் நெருங்கி வருகின்றது உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கள் உச்ச நீதிமன்றத்தாலும் பாராளுமன்றச் சட்டத் திருத்தங்களாலும் தவறானது என்றும், நீதிக்குப் புறம்பானது என்றும் அறிவிக்கப்படும் கொடுமைகள் நிகழ்ந்தன. ஒரே மாதிரியான இரண்டு குற்றங்கட்கு இரண்டு மாறுபட்ட தீர்ப்புக்கள் வழங்கப்படும் அதிசயங்கள் நிகழ்ந்தன.

நாட்டின் நல்வாழ்வுத் திட்டங்களுக்கு அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமையாக விளங்கிய நலங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்குத் தடைக்கல்லாக உள்ளது என்று தூக்கி எறியப்பட்டுவிட்டது நமது அரசியல் சட்டத்தின் மூன்றும் பாகம் அடிப்படை உரிமைகள் பற்றியது. நான்காம் பாகம் நாட்டு நலன்களைக் குறிக்கும் திட்டங்களைப் பற்றியது. 4-ம் பாகத் திட்டங்களை நிறைவேற்ற வேண்டுமானால் 3-ம் பாக உரிமைகள் தேவையானவையாகும். ஆனால் வழிதனை அடைத்துவிட்டு பயணம் செய் என்ற பைத்தியக்கார ஆணைகளிடப்பட்டன.

“முடியாட்சியில் பொது மக்கள் நலனுக்கு ஒரு மன்னனின் கொடுங்கோன்மை கெடுதலாக அமைவதைக் காட்டிலும் ஜனநாயகத்தில் மக்களின் அசட்டை மிகக் கெடுலாக முடியும்’

என்று மான்ட்ஸ்க்யூ என்பவன் அழகாகச் சொல்லியிருக்கிறான்.

அரசியல்வாதி என்றால் அதிகார வெறிபிடித்தவன் என்ற நிலை மாறவேண்டும் அடிப்படை உரிமைகள்பற்றி சட்ட ஒழுங்குபற்றி. சமுதாய உணர்வுபற்றி அவன் எண்ணிப் பார்க்கவேண்டும். நான்தான் நாடு நாடுதான் நான் என்ற நிலை மாறவேண்டும் ஒருஅரசியல் கட்சி அழிந்தால் நாடே அழிந்துவிடும் என்று கூறுவது தவறு. வரலாற்றில் பல கட்சிகள் தோன்றி இருக்கின்றன அழிந்திருக்கின்றன ஆனால் நாடு அழியாது 14-ம் லூயி நான்தான்; நாடு, நாடுதான் நான் என்றான். அந்த லூயிதான் அழிந்தான். அவன் ஆண்ட பிரான்சு அழியவில்லை.

நீதி என்பதும் சட்டம் என்பதும் எல்லாருக்கும் பொதுவான ஒன்று. சட்டத்தின்முன் அனைவரும் சமம். ஜனநாயகத்தில் அனைத்துக் கட்சிக்கும் சமமான இடம் ஒதுக்கப்பட வேண்டும். எந்த நாட்டில் எதிர்கட்சிகள் சுதந்திரமான முறையில் இயங்குகின்றனவோ அங்குதான் உண்மையான ஜனநாயகம் உள்ளது என்றே கூறலாம். அந்த உண்மையான ஜனநாயகம் மீண்டும் இந்திய நடுவண் அரசின் மூலம் துளிர்விட்டு வளரும் என்று நம்புகின்றோம். தமிழக நடிகர் அரசு ஜனநாயக திரைக்குள்ளிருந்து சர்வாதிகார ஆணையிடுவதிலிருந்து திருந்தி கொள்ளும் என்று எதிர்பார்க்கின்றோம். இல்லையேல் காலத்தின் ஏடுகள் புரளும்போது புதிய அத்தியாயங்கள்தோன்றுவதை யாராலும் தடுக்க முடியாது.

தவணை முறைத் திட்டத்தில் புதிய சகாப்தம் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் எங்களது சுலபத் தவணைமுறைத் திட்டத்தில் நீங்களும் சேர்ந்து பயனடைவீர்!

H.O. 41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24
SHOW ROOM 50, ஏரிக்கரை ரோடு, சென்னை-33
B. O. 104-A ராமகிருஷ்ண மடம்சாலை, சென்னை-28
திறமையுள்ள ஆண் - பெண் கேன்வாசர்கள் தேவை!

டாக்டர் கலைஞர் நாள்மங்கல விழாவில் பாடிய

வாழ்த்துப்பா!

பாடியவர் :

பனப்பாக்கம் கு. சித்தா,
(மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர், தென்னார்க்காடு)

நெஞ்சத் தலைமகனே! நேர்வகிடு வைத்தவனே!
அஞ்சுகத்தாய் பெற்ற அரிமாவே!—கொஞ்சுதமிழ்
அஞ்சுகத் தாயாகி அன்பகத்தால் வாழ்த்துகிறேன்
நெஞ்சம் நிறைக நினைந்து!

என்காலின் தொட்டிலிலே தூங்கித் தூய்மை
எழுச்சியுறும் பாலுண்டு தெற்குத் தென்றல்
மென்கால்கள் தலைநீட்டும் சோழ நாட்டில்
மெய்யெழுத்தாம் தமிழுண்டு, உயிர்த்தாய் நீயோ
சின்னவனாய் இருக்கையிலே தூக்கு மேடைச்
சிறியதொரு நாடகத்தை வடித்தாய்! இன்றோ
உன்னைத்தான் தூக்கிலிட வழக்குப் போட்டே
ஒத்திகையைப் பார்க்கின்றார்! சிரிக்கின்றாய்நீ!

பாதியிலே படிப்புதனை நிறுத்தி விட்டுப்
பகுத்தறிவுப் பள்ளியிலே சேர்ந்தாய்! பொல்லாச்
சாதியினால் புழுக்கின்ற கொடுமை தன்னைச்
சாடுதற்குத் தன்மானப் பட்டம் பெற்றாய்!
ஆதியிலே வாழ்தமிழர் வீரம் தன்னை
அன்றாடம் புறப்பாட்டாய் பாடு கின்றாய்;
மோதுகின்ற எதிர்ப்பினிலும் அண்ணா கண்ட
முத்தமிழைத் தான்கண்டேன் உவகை கொண்டேன்!

தாழ்வென்றும் வாழ்வென்றும் வந்த போதும்
தன்மானம் தாழாத தலைவ னாக;
வாழ்வதுதான், வாழ்வென்னும் இலக்க ணத்தை
வாழ்வாகக் கொண்டுள்ள மகனே! உன்னை
வாழ்த்துகிறேன்! நீபிறந்த ஒவ்வோர் ஆண்டும்
வயிற்றினிலே பாலூற்றி மகிழ்விக் கின்றாய்!
வாழ்த்துகிறேன்! முதுமையினைச் சாய்த்த போதும்
வாழ்விழந்த தமிழர்களை வாழ வைப்பாய்!

வாள்கண்டாய்! வடவர்மொழி எதிர்த்தாய்! நாட்டில்
வாலாட்டும் பகைவரையும் எதிர்த்தாய்! அண்ணா
தாள்கண்டாய்! வஞ்சகரின் துரோகம் வென்றாய்!
தன்மானப் பெரியாரின் எதிர்ப்பைக் கொண்ட
தேள்கண்டாய் வால்நறுக்கிக் கொன்றாய்! ஆனால்
தேன்பேச்சு வஞ்சகரால் ஏமாந் தாய்நீ!
நாள்கண்டாய் மங்கலமாய்! தமிழர் வாழ்வின்
நம்பிக்கை யாய்வளர வாழ்த்து கின்றேன்.

முப்பெரும் தத்துவ மோதிரங்கள்!

மேற்படி மோதிரங்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. பல ஆண்டுகள் உழைக்கக் கூடிய ஒரு மோதிரம் விலை ரூ. 15. தபால் செலவு தனி. உங்களுக்கு தேவையான மோதிரத்தைக் குறிப்பிட்டு உங்கள் விரல் அளவை நூலில் எடுத்து, ரூ. 3 அட்வான்சுடன் அனுப்பினால், மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் மோதிரத்தை V. P. P மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர் : சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு. (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
“போட்டோ வீனஸ்” 104, C. N. K. ரோட், சென்னை-600 005.
PHOTOGRAPHERS (ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

அநீதி இழைத்தவர்களைத் தண்டிக்க அரசு தயங்குவது ஏன்?

பாளையங்கோட்டை சண்முகம் அறிக்கை!

அரசியல் கைதிகளைக் கொடுமை செய்த அதிகாரிகளைத் தற்காலிக வேலை நீக்கம் செய்திருப்பது வெறும் கண்துடைப்பே! செந்தாமரை, கிருஷ்ணசாமி, பரமகுரு ஆகியோர் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறை அதிகாரிகளை இந்த மாத இறுதிக்குள் டிஸ்மிஸ் செய்து அவர்கள்மீது கிரிமினல் வழக்கு தொடர வேண்டும் என்று மக்கள் உரிமைக் கழக அமைப்பாளர் பாளையங்கோட்டை வழக்கறிஞர் சண்முகம் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு ;—

சிறை அதிகாரிகள் 7 பேர் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்றும் வருவாய் வாரிய உறுப்பினர் ஒருவரைக் கொண்டு அவர்கள் மீது விசாரணை நடத்தப்படும் என்றும் ஏடுகளில் செய்தி வெளியாகியுள்ளது

சென்னை மத்திய சிறையில் 1976-ம் ஆண்டு பிப்ரவரியிலிருந்து 1977 பிப்ரவரி வரை தி மு க, தி க மார்க்சிஸ்டு ஆகிய கட்சிகளைச் சேர்ந்த 'மிசா.' கைதிகள் சிறை அதிகாரிகளால் அடித்துத் துன்புறுத்தப்பட்டனர். இதுபற்றி (சென்னைச் சிறைக் கொடுமைகள் பற்றி) விசாரிக்க நீதிபதி இஸ்மாயில் அவர்களை தமிழக ஆளுநர் கமிஷனாக நியமித்தார். கமிஷன் நியமனம் 1977-ம் ஆண்டு மே 12 அன்று அரசிதழ்க் குறிப்பிலும் வெளியானது. தாம் நியமிக்கப்பட்ட நான்கு மாதங்களிலேயே அதாவது 1977 செப்டம்பர் திங்களில் நீதிபதி இஸ்மாயில் அறிக்கை அளித்தார்.

அந்த அறிக்கையைப்பெற்றுக்கொண்ட தமிழக அரசு 5 மாத காலம் தூங்கிக்கொண்டிருந்தது பொது மக்களின் நிர்ப்பந்தத்தின் காரணமாக 15—2—78 அன்று இந்த அறிக்கையைதமிழகஅரசு வேண்டா வெறுப்புடன் வெளியிட்டது.

கமிஷனின் முடிவுகளை அரசாங்கம் விரிவான முறையில் ஏற்றுக் கொண்டிருந்தாலும் கூட சிறை அதிகாரிகளைத் தற்காலிக வேலை நீக்கம் செய்ய மேலும் நான்குமாதங்களை எடுத்துக் கொண்டது. இந்தத் தற்காலிக வேலை நீக்க உத்தரவு மேலும் சில மாதங்கள் வரை தொடரா்மல்கூட போனால் ஆச்சரியப்படுவதற்கில்லை உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவர் தெரிவித்துள்ள முடிவுகள் குறித்து வருவாய் வாரிய உறுப்பினர் ஒருவர் நடத்தவிருக்கும் விசாரணையின் தன்மையைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

இந்த மாத இறுதிக்குள் அந்தச்சிறை அதிகாரிகளை முழு வேலை நீக்கம் செய்து (டிஸ்மிஸ்) விரைவில் அவர்கள் மீது நீதிமன்றத்தில் கிரிமினல் வழக்குத் தொடர வேண்டுமென்று எல்லா அரசியல் கட்சிகளும், பொது வாழ்விலுள்ளோர் அனைவரும் ஒருமித்த குரலில் வலியுறுத்த வேண்டும்.

சிறைக் கொடுமைகள் நடைபெற்ற போது சிறைத் துறை ஐ. ஜி. யாக இருந்த பரமகுரு மீது தமிழக அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது வருந்தத் தக்கது. மற்ற சிறை அதிகாரிகளைக் காட்டிலும் அவர் செய்த குற்றம் எந்த விதத்திலும் குறைந்ததல்ல.

தனது அறிக்கையின் xix-வது அத்தியாயம் இரண்டாவது பத்தியில் கமிஷன் கீழ்க்கண்டவாறு தனது கண்டுபிடிப்பைக் குறிப்பிட்டுள்ளதை இங்கே நினைவு கூர்வது பயனுள்ளதாக இருக்கும்.

"இங்கு ஒன்றை நான் குறிப்பிட்டுத்தான் ஆக வேண்டியிருக்கிறது. ஒரு அதிகாரி மட்டும் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொண்டிருப்பாரேயானால்சென்னைச் சிறையில் நடந்த சம்பவங்களை— முற்றிலும் தடுத்து நிறுத்தியிருக்க முடியாவிட்டாலும் குறைத்திருக்கவாவது — முடியும் அப்போது சிறைத் துறை ஐ. ஜி யாக இருந்தவரைத் தான் குறிப்பிடுகிறேன்."

—இவ்வாறு நீதிபதி இஸ்மாயில் தனது அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே பரமகுரு மீதும் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அப்போது கூடுதல் ஐ ஜீ. யாக இருந்த என் கிருஷ்ணசாமி ஐ பி எஸ். மீதும் சென்னை நகரக் காவல் துறை அதிகாரியாக இருந்த செந்தாமரை மீதும் இஸ்மாயில் கமிஷன் கண்டனம் தெரிவித்துள்ளதை அரசு கவனித்தாகவே தெரியவில்லை. மேற்கண்ட மூவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசைக் கேட்டுக் கொள்கிறேன். பொது மக்களின் அபிப்பிராயத்தை ஒன்று திரட்டினாலொழிய அதிகார வர்க்க அரசு அசைந்து கொடுக்காது. சரியான பாதையில் இந்த அரசாங்கத்தை நகரச் செய்ய வேண்டியது பொது மக்களின் கடமையாகும்.

★

கலைஞர் கடிதம்....

1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யுட்களைவிட உற்ற துணை நமக்கு வேறு யாதும் இல்லை" வையாபுரியாரே, புறநானூற்றின் சிறப்புப்பற்றி இவ்வாறு கூறியிருக்கிறார்.

நமக்கு, இலக்கியங்களே வரலாற்றுக் குறிப்புக்களாக இருக்கின்றன. அந்தக் குறிப்புக்களையும் அழுக்குப்படுத்த தினமணிக் கூட்டம் மிக்க திறமையுடன் செயல்படத் தொடங்கியுள்ளது.

அவர்களது முயற்சி, எழுச்சியுற்ற நமது இனத்துக்கு மீண்டும் கேடு சூழ்வதற்காகவே அரும்பியிருக்கிறது!

இனப் புலவர்கள்-இலக்கிய அணியினர் இன்றே அந்தச் சதியை முறியடித்திடத் தங்கள் அறிவு, ஆராய்ச்சி, ஆற்றல் அனைத்தையும் கருவிகளாக்கிக்கொண்டு களம் புகத் தயாராக வேண்டும். இல்லையேல் இதிகாசங்களைப் பரப்பி, நமது இனத்தை அழிக்கத் துணிந்தவர்கள், நமது இலக்கியங்களையும் இழிவுபடுத்தி ஆழப் புதைத்து விடுவார்கள்! இது அலட்சியப்படுத்தப் படக் கூடிய எச்சரிக்கை அல்ல; உணர்வு படைத்தோர் உடன் செயல்படுக!

அன்புள்ள



ஏஜெண்டுகள் கவனிக்க

மே மாத பில் பணத்தை உடனடியாக ஏஜெண்டுகள் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். பணம் அனுப்பாதவர்களுக்குப் பிரதிகள் அனுப்புவது நிறுத்தப்படும் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

— நிர்வாகி
'நம்நாடு'

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால், அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை -600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம்; 'அன்பகம்' 1/104-B அண்ணாசாலை, தேனும்பேட்டைசென்னை-600018 தொலைபேசி441009